# திராவிட நாடு

1—1—61 | வார வெளியீடு | விலை 16 காசு


# இரு காட்சிகள்

[வை. பெருங்கோ]

**வடக்கில்:**

வானைத் தொடஉயர் ஆலைப் புகைச்சுருளாய்
வளர்ந்து எழுவதிலே—வறுமை
தளர்ந்து வீழ்வதிலே—விளையாக்

கரடைத் திருத்திடக் கோடிப் பணத்தினில்
காணும் அணைகளிலே—அவற்றைப்
பேணும் முறைகளிலே;

ஆணி முதல்பெரும் பொறி வரையிலும்
ஆக்குந் தொழிலினிலே—அதையவர்
ஊக்குந் திறத்தினிலே—நமக்குக்

காணக் கிடைத்திடும் காட்சி யாவுமே
வடக்கினில் கண்டுவிட்டோம்!—அதன்
வஞ்சகம் உணர்ந்துவிட்டோம்!

**தெற்கில்:**

சாலை அடவினில் ஓலப் பசிக்குரல்
ஓங்கி எழுவதிலே—பின்னவர்
ஏங்கிச் சாவதிலே—வேலைக்காய்

ஈழக் கடலினில் மாய்ந்தோர் உறவினர்
கட்டி அழுகையிலே—வடவர்
வட்டிக் கடைகளிலே;

பூமிக் கடியினில் வேண்டும் கனிவளம்
புதைந்தே தூங்குவதில்—வறுமை
வதைத்தே ஓங்குவதில்—ஆளுவோர்

தாமும் அலட்சியர் காட்டுவதில் தேயும்
தெற்கினைக் கண்டுவிட்டோம்!—மாயும்
தெற்கினைக் கண்டுவிட்டோம்!!

# அழுக்காறு

“உங்கள் ஒப்புதல் பெருமலே உங்கள் மிதி வண்டியை இன்று நான் எடுத்துக்கொண்டு போய்ப் பயன்படுத்திவிட்டேன், பொறுத்துக்கொள்ளவேண்டும்” என்று மிதி வண்டியைக் கொண்டு வந்து நண்பர் வீட்டெதிரில் நிறுத்திஞர் ஒருவர். நண்ப பேசவில்லை. ஒருவெற்றுப் புன்னகையை உதிர்த்தார். வந்தவர் ஒரு முறை நண்பர் முகத்தை ஏறிட்டு நோக்கிவிட்டுத் தம் வழியே திரும்பிப் போஞர். நான் நண்பரை இமை கொட்டாது உற்று நோக்கிக்கொண்டிருந்தேன். ஏன் அவர் வாய் திறந்து ஒரு வார்த்தைகூட மறுமொழியாகப் பகரவில்லை?

“உங்கள் உடன்பாடு இல்லாமலே உங்கள் தலையில் புழுதியை வாரி இறைத்துவிட்டேன். உங்கள் ஒப்புதல் இல்லாமலே உங்கள் வீட்டுக்குத் தீ வைத்துவிட்டேன்” என்று சொல்வதற்கும், இப்போது இந்த ஆள் ‘உங்கள் ஒப்புதல் பெருமலே உங்கள் மிதி வண்டியை எடுத்துக்கொண்டு போய்விட்டேன், என்று சொன்னதற்கும் சிறிதுகூட வேறுபாடே இடையாது. என் வேலையே பாழாகிப் போய்விட்டது இன்று. நான் முக்கியமாகப் போகவேண்டிய ஓரிடத்திற்குப் போக முடியாமற் செய்து விட்டாரே அந்த ஆள்,” நண்பர் அங்கலாய்த்தார்.

கேவலம் ஒரு சாமானிய அலுவல்—அது தலைபோகின்ற அலுவலாக இருந்தால், நண்பர் எப்படியாவது போய்த்தானிருப்பார்—அது கெட்டுவிட்டது என்பதற்காக எவ்வளவு அங்கலாய்த்துக் கொள்கிருர் நண்பர். சிலர் மற்றவர்களின் வாழ்வையே கெடுத்து விடுகிருர்களே,—அவர்கள் ஒப்புதல் பெருமலேயே!

அதோ அந்த நாற்சந்தியருகில் ஒரு தேநீர்க் கடை இருக்கின்றது பாருங்கள், அது நேற்றுவரை பாண்டியனுக்குச் சொந்தமாக இருந்தது. சொந்தம் என்ருல்? அந்த இடமும், கடையும் வேருெருவருடையது. அங்கு நடந்து கொண்டிருந்த தொழில் பாண்டியனுக்குச் சொந்தம்.

இந்தப் பக்கத்தில் அது ஒன்றுதான் தேநீர்க் கடை. இடமோ நாற்சந்தி; அடிக்கடி மக்கள் கூடுமிடம். வியாபாரத்திற்குக் கேட்க வேண்டுமா?

பாண்டியன்கூட நீண்ட நெடு நாட்களாக அங்கு கடை வைத்துக் கொண்டிருக்கவில்லை. கடந்த இரண்டாண்டுக்காலமாகத்தான் அவனுடைய தேநீர்க் கடை அங்கு நடைபெற்றுக் கொண்டு வந்தது. அதற்கு முன் அந்த இடம்—கடை—மாதத்திற்கு ஒருவரிடமாகக் கை மாறிக்கொண்டு வந்தது. எத்தனையோ சில்லறைக் கடைகள், எத்தனையோ வேறு வேறு கடைகள் வந்து, வந்து போயின அங்கு. அந்தக் கடைக்கான வாடகையைச் சரிவரப் பெறுவதே அதன் உரிமையாளருக்குப் பெரு முயற்சியாக இருந்தது. கடைசியில் ‘வாடகையும்’ வேண்டாம்! ஒரு மண்ணுங்கட்டியும் வேண்டாம்! மாதத்திற்கு ஒருவனிடம் மாரடிக்க என்ஞல் முடியாது,’ என்று அதை மூடியே போட்டுவிட்டார்—ஆறு மாதங்கள்—அதன் உரிமையாளரான நல்லமுத்து. அந்த ஆறு மாதங்களும் அந்தக் கடையின் முன் பகுதி—தாழ்வாரம் மரத்தடிவாசிகளுக்குச் சற்று உதவியாக, இருப்பிடமாகப் பயன்பட்டு வந்தது. சில சமயங்களில் தெரு நாய்களுக்கும், வழி தவறி ஓடிவரும் பொதி சுமக்கும் கழுதைகளுக்கும், இன்னும் எது எதற்கெல்லாமோ இரவு வேளைகளில் அது பயன்பட்டு வந்தது.

ஒரு நாள் மூடிக்கிடக்கும் அந்தக் கடையின் தாழ்வாரத்திற்போய் நிற்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது—மழை காரணமாக—பாண்டியனுக்கு. பாண்டியன் வெளியூர்க்காரன். கடந்த நாலு ஆண்டுகளாக அவன் இந்த ஊரில் இருப்பதால், இப்போது அவன் இந்த ‘நெல்லியூர்’க்காரன். அவன் ஓர் உண்டி விடுதி வேலையாள். புகை வண்டி நிலையத்திற்கெதிரே மிக்க புகழ் வாய்ந்து நிற்கும், சிறக்க வியாபாரம் நடக்கும், பேர்பெற்ற ‘மணி விலாஸ்’ உணவு விடுதியில் அவன் உழைத்து வந்தான்.

**கனகு**

பாண்டியன் நல்லவன். ஓரளவு எழுதப்படிக்கத் தெரிந்தவன். சிரித்த முகத்தினன்; இனிய மொழியினன்; சுறுசுறுப்புள்ளவன்; உழைப்பாளி. அவன் இந்த நெல்லியூர்க்கு வரவேண்டுமென்று திட்டம் போட்டுக்கொண்டு வரவில்லை. அவனையொத்த தொழிலாளர்கள் வேலை இல்லாமல் ஊர் ஊராக அலைந்து திரிவதுபோல், அவனும் ‘எங்காவது போகலாம்’ என்று ஓசிப் புகைவண்டிப் பயணம் செய்துகொண்டு வந்தான். வண்டியில் வந்த சீட்டுப் பரிசோதகர் அவனைத் தேடிக் கண்டுபிடித்தார். “நீ தேடிக்கொண்டு திரியும் வேலை வண்டியில் இல்லை. அது இந்த ஊரில் இருக்கிறது” என்று சொல்லாமற் சொல்லி, இறக்கி விட்டார். பிறகு நிலையத்தின் வெளி வாயில் வரை மரியாதைக்காக அவன் பின்ஞல் வந்தார். பிரியும் இடத்தில் அவன் முதுகில் இரண்டு வைத்துப் பின்னும் தன் மரியாதையை அப்பட்டமாகத் தெரிவித்துக்கொண்டுவழியனுப்பி வைத்தார். ‘இவ்வளவு நல்ல பரிசோதகரோடு பயணம் செய்யாமல் விட்டுவிடுவதா’ என்று பாண்டியன் அந்த நிலையத்தையே சுற்றிக் கொண்டு வந்து, பின்புறமாகப் புகை வண்டியை அடைந்து, அதில் தொத்திக்கொள்ள முயன்ருன். ‘அவ்வளவு தூரம் அவனுக்குச் சிரமம் கொடுக்கலாமா? பாவம், வேலை தேடிக்கொண்டுவருபவன்’ என்று புகை வண்டி அவன் மீது இரக்கப்பட்டு அவன் வந்து தொடுவதற்கு முன் நகர்ந்து விரைந்து விட்டது.

பிறகு, அவன் நிலையத்தைச் சுற்றிக்கொண்டு எதிர்ப்புறம் வரவில்லை. சற்று நேரம் அங்கே ஒரு மரத்தடியில் அமர்ந்தான். எப்போதோ வந்து, தானே அடங்கிய பசி இப்போது திரும்பவும் தலைகாட்டியது. அந்தப் பக்கம் சுற்றுமுற்றும் பார்த்தான் பொதுக் குழாய் ஏதேனும் இருக்கின்றதா, பசிக்குச் சிறிதளவு தண்ணீர் குடித்துக் கொள்ளலாமென்று. அப்படியொன்றையும் காணவில்லை அங்கு.

மரத்துக்கு எதிரே இருந்த பலகாரக் கடைக்குப் போஞன் துணிச்சலுடன், கொஞ்சம் தண்ணீர் வாங்கிக் குடிக்கலாமென்று.

(13-ம் பக்கம் பார்க்க)

# மன்னராட்சியின் நிழல்!

(53-வது வட்டம்)

மலர் 19] ஆண்டுச் சந்தா ரூ. 8. (1—1—61) தனிப் பிரதி 16-காசு [இதழ்

'மக்கள் ஆட்சி' என்றால் என்ன? குடி மக்கள் தங்களைத் தாங்களே ஆண்டுகொள்வது. மன்னர் ஆட்சியோ, மன்னன் அளிப்பது எதுவோ, அதை மட்டும் பெறலாம்; — அது நல்லதாகவும் இருக்கலாம், அல்லததாகவும் இருக்கலாம்-மன்னன் விலக்குவது எதுவோ அதைத் தாங்களும் விடவேண்டும்—அது தேவையானதாகவும் இருக்கலாம், எனினும் மன்னன் விடச் சொன்னால் விட்டுத்தான் ஆகவேண்டும். விரும்பியது நடத்தல் மக்கள் ஆட்சி என்றால், தருவதைப் பெறுதல் மன்னர் ஆட்சி என்னலாம்.

இந்தியத் துணைக்கண்டத்தில் இன்று மணி முடி தரித்த மன்னர் இல்லை; அவரது ஆட்சியும் இல்லை. இங்கு உள்ளது மக்கள் ஆட்சி. எனவே, மக்களது மனக்கிடக்கைகள், வேட்கைகள், கோட்பாடுகள் இவை படிப்படியாக நிறைவேறும்; மக்கள் மகிழ்வர். மக்கள் வெறுப்பவை விலகும். என்றுதான் எவரும் எண்ணுவர். அதுவே முறை.

இத்தனைக்கும் இங்கு உள்ள 'நாட்டின் நாயகர்கள்' மக்களிடையே இருந்தவர்கள், தோளோடு தோள் நின்று பணிபுரிந்தவர்கள், மக்களுடைய மனத்தை நன்கு அறிந்தவர்கள், மக்கள் தொண்டே மாண்புள்ள தொண்டு என்று உணர்ந்தவர்கள் என்றெல்லாம் புகழப் படுகின்றனர். போற்றப்படுகின்றனர். எனவே, இவர்களது ஆட்சியில் மக்கள் மனநிறைவு பெற்றுக் குறையில்லா நிறை வாழ்வு வாழ வேண்டும். அமைதி நாட்டில் அரசோச்சவேண்டும், அல்லவா?

ஆனால், நாட்டின் நிலை என்ன? மக்கள் மனதில் என்னென்ன எண்ணுகின்றனர்?

குமுறல், கொந்தளிப்பு, கலக்கம், கசப்பு எங்கும் உள்ளது. 'நாங்கள் எண்ணியது வேறு, நடந்தது வேறு,' 'நாங்கள் கேட்டது வேறு, கிடைத்தது வேறு' என்று எங்கும் எவரும் சொல்லிடக் கேட்கின்றோம். கசப்பு சில நாட்களில் கலக்கமாகிறது; கலக்கம் குழப்பம் தருகிறது; குழப்பம் குமுறலாகிறது; குமுறல் கொதிப்பாகிறது. கொதிக்கும் நிலைக்கு நாட்டின் சில பகுதிகள் வந்துவிடும்போது 'நாயகர்கள்' உடனே "ஆவேசம் வேண்டாம், ஆத்திரம் வேண்டாம் அமைதி அமைதி" என்று அறிவுரை கூறுவதைக் காணுகின்றோம்.

ஏன் இந்த நிலை? மன்னர் ஆட்சிக் காலத்தில் நடக்கவேண்டியவை, மக்கள் ஆட்சியில் நடக்கக் காரணம் என்ன? சில நிகழ்ச்சிகளைப் பார்த்தால் விளங்கும்.

தேவிகுளம் பீர்மேடு பகுதிகள் யாருக்குச் சொந்தம்? என்ற கேள்விவந்தபோது, நாங்கள் சொல்கிறோம், இவர்களுக்குச்சொந்தம் என்று, ஒரு திசையில் கையை நீட்டிக் காட்டினர்.

ஆந்திரத்தைப் பிரிக்கவேண்டும் என்று கேட்டபோது, முடியாது என்று மறுத்துவிட்டனர். மராட்டியர் மாநிலம் கேட்டதற்கு இயலாது என்றனர்.

இப்படி உள்ள எண்ணற்ற நிகழ்ச்சிகளைத் திரட்டிப் பார்க்கும்போது டெல்லியில் உள்ள ஆட்சியினர் மக்கள் கருத்து என்ன என்பதை அறியாமல் தங்கள் மனத்தில் தோன்றியதை மட்டுமே நம்பி நடந்திருக்கின்றனர்.

இவை உள்நாட்டு விவகாரங்கள், எனவே தங்கள் விருப்பம்போல் நடந்தனர் என்று சொல்லலாம்.

இந்தியத்தாயின் — பாரதமாதாவின் — எல்லையில் சிறிது—பெருபாரியை—குறைத்து, வெட்டி எடுத்துப் பாகிஸ்தானுக்குக் கொடுக்க முடிவெடுத்து ஒப்பந்தம் எழுதிக் கையெழுத்தும் இட்டுவிட்டனர். யாரைக் கேட்டுக் கொண்டு? பெருபாரியில் உள்ளவர்களைக் கலந்தா? இல்லை, அந்தப் பகுதியில் உள்ள வங்க அரசினரைக் கேட்டா? அதுவும் இல்லை. இப்போது அங்கே அமளி. மக்களின் எதிர்ப்புக் குரல் எக்காளமாகியுள்ளது.

நாட்டின் 'மானம்' காப்பாற்றப்படவேண்டும் என்று நேரு 'உருக்கமாக' வேண்டுகின்றாராம் இப்போது. விட்டுக்கொடுக்கக் கேட்கிறார். இதை முன்பே செய்திருந்தால்? 'இப்படி ஒரு எண்ணம் இருக்கிறது—நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?' என்று கேட்டு அறிந்து செயல்பட்டிருந்தால் 'மானம்' அப்போதே காப்பாற்றப்பட்டிருக்கும் அல்லவா?

இந்த நிகழ்ச்சிகளைப் பின்னணியாக வைத்துப் பார்க்கும்போது மக்கள் ஆட்சியில், மன்னர் ஆட்சியின் நிழல் இருப்பது புலனாகும். இந்த நிழல் பொல்லாதது; மன்னர் ஆட்சியைவிடத் தீதானது. மக்கள் ஆட்சி நிலைத்து மாண்புறவேண்டும் என்று கருதுவோர் இதைக் களைய முனைவாராக. ★

# புத்தரின் அடிச்சுவட்டில்....

[ தமிழ்த்தும்பி ]

ஏறத்தாழ இரண்டாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன் தோன்றிய புத்தர், பகுத்தறிவுக்கொள்கையின் விடிவெள்ளியாக விளங்கினார். சூழ்ந்து வரும் பேரிருள்போல் பரவிவந்த ஆகாத நெறிகளை முதன்முதல் எதிர்க்கும் நெஞ்சுரம் பெற்றவர் அவரே.

மனித வாழ்க்கையைப்பற்றியும், அவ்வாழ்க்கையில் நேரும் இன்ப துன்பங்களைப்பற்றியும் கூர்ந்து ஆராய்ந்து புத்தர், வெளியிட்ட உண்மைகளுக்குச் சமய உலகம் 'பௌத்த சமயம்' எனப் பெயரிடினும், நாம் அதனை ஒரு 'மறுமலர்ச்சிக் கொள்கை' என்ற நோக்குடனேயே ஆய்வதற்குப் பெரிதும் இடமுண்டு. ஏனெனில் பிற சமயங்களெல்லாம் புறக்கணித்து ஒதுக்கிவிட்ட அறிவாராய்ச்சிக் கொள்கையைப் புத்தர் நெறி முதன்மையாக ஏற்றுக்கொண்டது மட்டுமல்ல, அதுவே அந்நெறியின் ஆணிவேராகவும் இருக்கின்றது. கடவுளைப்பற்றிய கருத்தில் புத்தர் நெறி காட்டிய பெருந்தன்மையும், கருத்துச் சுதந்தரமும் வேறு எந்தச் சமயமும் அளிக்காத பெருங்கொடைகளே. ஒரு முறை புத்தரிடம் ஒருவர், இறைவன் அல்லது கடவுள் என்று ஒருவர் உளரோ? என்று வினவியதற்குப் புத்தர், "இக்கேள்வியைக் கேட்டவனும் கேட்பது என்ன என்பதை அறியான். அதற்கு விடை சொல்வோனும் அறியான்" எனப் பதில் தந்தாராம். கடவுள் வழிபாட்டையும் புத்தர் நெறி ஏற்றுக்கொள்ளவில்லை. 'பிரார்த்தனை செய்து என்ன பயன்? இருள் வெளுத்து விடாது; மோன நிலையைப்பார்த்து வரங்கேட்டால் மௌனமே பதிலாக வரும்!' என்கிறார் புத்தர்.

'பாரமிதைகள்' என்ற உயர்ந்த பண்பாடுகளாகக் கீழ்க்கண்டவற்றைப் புத்தர் குறிப்பிடுகின்றார்.

கொடை (தானம்)
ஒழுக்கம் (சீலம்)
சுயநலமற்ற தன்மை (நிஷ்காமியம்)
மெய்யறிவு (பிரஜ்ஞை)
இடைவிடா முயற்சி (வீரியம்)
உண்மை (சத்தியம்)
பொறுமை (சாந்தி)
வலிமை (அதிஸ்தானம்)
கருணை (மைத்திரி)
உள்ளத்தின் சமநிலை (உபேட்சை)

இப்பத்துப் பண்பாடுகளும், விளையும் பயிர் முளையிலே தெரியும் என்பதற்கேற்பப் புத்தரிடம் இளமையிலேயே காணப்பட்டனவாம்.

"தண்ணீரைத் தெளித்துவிட்டு, 'இது புனிதத்தலம்!' என்று கூறுவதால் ஓர் இடம் புனிதத் தலமாகிவிடாது. புனிதத் தன்மை இதயத்தைப்பற்றிய உணர்ச்சியேயாகும். தண்ணீரால் பாவத்தைக் கழுவமுடியாது. தண்ணீர் தண்ணீரே தவிர, வேறில்லை"

"நீருள் நின்று தவம்புரிவதால் சுவர்க்கம் கிடைக்குமென்றால், மீன்களே முதலில் சுவர்க்கத்திற்குரியவை!"

"பவித்திரமான உணவினால் புண்ணியம் கிடைத்துவிடுமென்றால், புல்லைத் தின்னும் மான்களும் புண்ணியமூர்த்திகளே."

"வேண்டுமென்றே உடலுக்குத் துன்பம் தேடுதல் புண்ணியமென்றால், இன்பம் தேடுதலையே இலட்சியமாய்க்கொள்வது மட்டும் ஏன் புண்ணியமாகாது?"

"சொர்க்க ஆசையினால் நான் இங்கு வரவில்லை. முதுமையையும் மரணத்தையும் வென்றழிப்பதற்காகவே வந்துள்ளேன்"

புத்தரின் மேற்கண்ட அறிவுரைகள் பகுத்தறிவு அடிப்படையில் எழுந்து பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துக்களைக் கொல்லும் படையாக விளங்குவதை அறிவியக்கத் தாராளிய அனைவரும் அறிந்து மகிழக்கூடியனவாம்.

மேற்குறித்த 'பாரமிதைகள்' என்ற பத்து உயர் பண்பாடுகளும், 'துக்கம் நிலைத்திருத்தல்'—'துக்க உற்பத்தி'—'துக்க நீக்கம்'—'துக்க நீக்க வழி' என்ற நான்கு வாய்மைகளும் வள்ளுவர் கண்ட பொது அறங்களைப்போல மனித இனம் முழுவதற்குமே பொருந்தி வருதல் அறிந்தின்புறற்பாலதல்லவா? மேலும் துக்க நீக்கத்திற்குரிய எட்டு வழிகளாகக் (அஷ்டாங்க மார்க்கம்) கீழ்க்கண்டவை குறிக்கப்படுகின்றன. அவையும் பொதுமைப் பண்புடன் விளங்குவது கண்டின்புறுக! 1. நற்காட்சி 2. நல்லூற்றம், 3. நல்வாய்மை. 4. நற்செய்கை 5. நல்வாழ்க்கை 6. நல்லூக்கம். 7. நற்கடைப்பிடி. 8. நல்லமைதி.

இங்ஙனம் சமயம் என்பது இவ்வுலக வாழ்க்கையின் மேடுபள்ளங்களை அலசி ஆய்ந்து எல்லோரும் இன்புற்றிருக்க வழி தேடும் நெறியாக மட்டுமே தொடர்ந்து இருந்திருந்தால், அது 'மத'மாக மாறியிருக்காது; புத்தரைப் போன்ற பெரியோர்களைத் தவிர, ஏனையோர் கண்ட சமயநெறி 'மத' வெறியாக மாறி இல்லாததைத் தேடியலையும் மனப்பான்மையை வளர்த்துவிட்டது. ஓர் அறிஞன் கூறியபடி அதுவே பின்னர் அபினாகவும் மாறி மக்களை மயக்கவும் செய்தது.

சமயக் கண்ணோட்டத்தை அறவே நீக்கிவிட்டுப், புத்தர் வாழ்க்கையையும், அவர் வாய்மொழிகளையும் மறுமலர்ச்சிக் கண்ணோட்டத்தோடு திறனாயும் ஒரு நூல் இன்றைய சமுக சீர்திருத்தப் பணிகளுக்குப் பெரிதும் துணைபுரியும் என்பதில் ஐயமில்லை.

பொதுவாகச் சமயத் தலைவர்களின் பிறப்பு வாழ்க்கை இவற்றைப்பற்றி ஒட்டிப்புனைந்த கதைகளுக்குப் பஞ்சமில்லை. அறிவுவாதியாகிய புத்தரின் பிறப்பும் வாழ்க்கையுங்கூட இதற்கு விலக்கல்ல. நாளடைவில் அவரைப் பின்பற்றியவர்களும் வழக்கமான சமயச் சடங்குகளில் மூழ்கத் துவங்கினர். இன்றுங்கூடப் போற்றிப் பாதுகாக்கப்படும் புத்தருடைய பல்லுக்கு அளிக்கப்படும் 'மகத்துவம்' அவருடைய கொள்கைகளுக்கும் அளிக்கப்படுகின்றனவா? என்பது ஐயத்திற்குரியதே!

★

# அமைதி

குழந்தையை விட்டுவிட்டுக் கன்னியப்பன் விலகமுடியவில்லை; அதுவே பள்ளியில் நின்றது. குழந்தை முந்திய நாட்களைப்போலவே இன்றும் அடம் பிடித்தது. அழத்தொடங்கியது. அதன் கேவல் ஒலி கேட்போரை இரங்கவைக்கும் தன்மையது. இது ஐந்தாவது நாள்;— இப்படி அந்தக் குழந்தை அடம்பிடிப்பது. சற்றுத் தொலைவு நடந்தான் கன்னியப்பன். அவன் கால்கள் செயலிழந்தாற்போல் நின்றன. 'அழட்டும். நன்றாக அழட்டும். அழுது, தானே ஓய்ந்து மற்றப் பிள்ளைகளோடு பழகத் தொடங்கினால் அச்சம் நீங்கிப் போகும். அதனமேல் படிப்பிலும் ஈடுபாடு ஏற்படும்? அவன் வெளியில் நிற்பதை உள்ளறையிலிருந்தபடி, குறுக்கும், நெடுக்குமான தடுப்புச் சட்டங்களின் இடுக்குகள் வழியே குழந்தை பார்த்தது. அதன் கேவல் ஒலி பின்னும் பெருகிற்று.

அங்கிருந்த ஆசிரியை புதியவள். அன்றுதான் அவள் மாற்றலாகி வந்திருந்தாள். அவள் குழந்தையை அமைதிப்படுத்த முயன்றாள். மெல்ல அழைத்துக்கொண்டு போய்,— இழுத்துக்கொண்டுபோய் உட்காரவைத்தாள். ஆசிரியையின முயற்சியெல்லையை மீறிக்கொண்டு அந்தக் குழந்தை முரணியது. பின்னும், பின்னும் பலமாகக் கிளம்பி வரும் குழந்தையின கேவல் ஒலி கன்னியப்பனைத் திரும்பவும் பள்ளிக்குள் இழுத்துக்கொண்டு வந்தது. அவன் திரும்பி வருவதைப் பார்த்ததும், குழந்தை அவனை நோக்கி ஓடியது. ஆசிரியை அதனைத் தடுக்கவில்லை. சும்மா வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றாள்— வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றாளா, வேறு எதையாவது சிந்தித்துக்கொண்டிருந்தாளோ! அது அவளுக்குத் தான் தெரியும்!

தந்தையை நோக்கி ஓடிய குழந்தை அவன முழங்கால்களைக் கட்டிக்கொண்டு, 'அப்பா, அப்பா!' என்று கதறியது கன்னியப்பனுக்குக் குழந்தைமீது ஆத்திரம். ஆத்திரமாக வந்தது. அந்த ஆத்திரம் அவன்பால் எப்போதாவது தன்னைமீறி வருவது.

"இன்றைக்கு உன்னை நான் திரும்ப அழைத்துக்கொண்டு போகப்போவதில்லை. நீ பள்ளியிற் படித்துவிட்டுத்தான் வரவேண்டும்" படபடவென்று குழந்தையை இழுத்துக்கொண்டு பள்ளிக்குள்

**க. இராசன்**

நுழைந்தான் அவன். உட்கார வேண்டிய இடத்திற்கொண்டு போய், குழந்தையின தோளைப் பிடித்து அழுத்தி. வலிமைகாட்டி உட்கார வைத்தான — வைக்க முயன்றான. அந்தச் சின்னஞ்சிறு பிஞ்சு திமிறிக்கொண்டு எழ முயன்றது. "முடியாது நான் இருக்க மாட்டேன்! எனக்குப் பயமா இருக்குது! நான் உன்னோடுதான் வருவேன." அந்த மழலை தன குதலைத் தமிழால் கேவல் ஒலிக்கிடையே இப்படிக் கூவியபடி அவன கால்களோடு வந்து பின்னிக் கொண்டது.

"என்ன பயம்? ஏன் இருக்க மாட்டே? உன்னைக் கொன்று போட்டுவிடுவேன்! உன்னால் எத்தனை துன்பம்! எத்தனை வேதனை! இரவு பகல் இடைவிடாமல் என் உயிரை வாங்கிக்கொண்டிருக்கின்றாயே நீ!"

ஆத்திரத்தின் அளவு மீறிய ஆற்றலால் அச்சொற்கள் அவன் உள்ளத்தை உடைத்துக்கொண்டு வெளியில் வந்து தெறித்து வீழ்ந்தன. அவன் கையை ஓங்கிக்கொண்டு அந்த மழலையை அடிக்கப் போனான். அடித்தேவிட்டான. ஆனால் அந்த அடி அம்மழலைமீது படவில்லை. பிறிதொரு மென்கரத்தின்மீது பட்டது.

கன்னியப்பன் திகைத்துப் போனான. நிமிர்ந்து நோக்கினான. அவனை அவனால் நம்பமுடியவில்லை. அவன ஆத்திரம் ஓய்ந்து எங்கோ திசைமாறிப் போய்விட்டது. அவனுடைய அந்தத் திடீர் மாற்றம் குழந்தையைக்கூட வாயடைக்கச் செய்துவிட்டது.

"ஆமாம். நீ..." கன்னியப்பன் பேச எண்ணினான. என்ன பேசுவது? என்ன வினவுவது? தோன்றவில்லை அவனுக்கு.

"ஆமாம், நான்தான்" அவள் பேசினாள்.

"பூவரசி, உனக்கு நான் இழைத்த அந்த மாபெரும் துரோகத்திற்கு நான வேண்டியமட்டும தண்டனை அடைந்துவிட்டேன. தண்டனை அடைந்துகொண்டிருக்கிறேன். என்றென்றும் தண்டனையடைந்துகொண்டே கிடக்கவேண்டிய சூழ்நிலையிலே தள்ளப்பட்டுவிட்டேன" என்று அவன உரக்கச் சொல்லவில்லை. உள்ளத்துள நினைத்துக் கொண்டான.

ஏழாண்டுகட்கு முன் ஒருநாள், இப்படித்தான இதேமாதிரிமொரு சூழ்நிலையில் அவர்கள் இருவரும்

சேர்ந்துகொண்டார்கள். சூழ்நிலை தான் இப்படி. ஆனால் உள்ளநிலை இந்நிலைக்கு எவ்வளவோ வேறுபட்டது. அந்தக் காட்சி — அந்த முதல் சந்திப்பு—இருவர் உள்ளங்களிலிருந்தும் மறையக்கூடியதா? என்றென்றும் பசுமைநிலை மாறாமல், உள்ளத்தில் நின்று நிலவும் தன்மை பெற்றுவிட்டதாயிற்றே அது.

கல்லூரிக்குப் போகும் வழியில், —அடம்பிடித்து நின்ற தங்கையொருத்தியைப்பள்ளியிற்கொண்டுபோய் விட்டுவிட்டுப் போகவேண்டிய வேலை பணிக்கப்பட்டது ஒரு நாள் கன்னியப்பனிடம். அன்றைக்கு என்று சோதனையாகக் கல்லூரிக்குள் நுழைவதற்குமுன் பிறிதொரு முக்கியமான அலுவல் இருந்தது அவனுக்கு. அந்த அலுவலைப்போய்க் கவனித்துவிட்டுக் கல்லூரிக்குப் போவதற்கு நேரம் போதாதே என்று அவன் துடித்துக்கொண்டிருந்த வேளையில்தானா, இந்த வேலையும் அவன் தலைமீது வந்து விழவேண்டும்! மற்ற அலுவலை மறுநாள் பார்த்துக் கொள்ளலாமென்றுகூட அவன் போயிருக்கலாம்-இன்றைய நிலையில் அன்று இருந்திருந்தால். அது பிள்ளைப் பருவம் ஆயிற்றே! நினைப்பது எதுவோ—அது உள்ளத்திற் பதிந்துவிட்டால்—அதனை உடனே, அப்போதே செய்து முடிக்கவேண்டும் என்ற துடிப்பு நிறைந்த பருவமாயிற்றே! அதனால் அன்று அவன்பால் இட்ட பணி உள்ளத்தில் வெறுப்பை மூட்டிவிட்டது. அந்த வெறுப்பை அவன் யார்மீது காட்டுவான்? பரபரவென்று தங்கையை இழுத்துக் கொண்டு விரைந்தான். 'பச்சைக் குழந்தை பதை பதைக்க எப்படி இழுத்துக்கொண்டு போகிறான் பார்' என்று வழியோடு போவோர் வருவோர் எல்லாம் அவனைப்பற்றி இழித்துப் பழித்துப்பேசும் அளவு பரபரப்புடன் சென்று பள்ளியை அடைந்தான் அவன்.

அந்த அடம் பிடித்த தங்கையோ அங்கே பள்ளிக்குள் நுழைவதற்கே முரணினாள். அவனுக்கு ஆத்திரம் தாங்கவில்லை. "என் வேலையைக் கெடுக்கவேண்டுமென்று, சமயத்தில் வந்து முளைக்கிறீர்களே சனியன்கள்!" என்று திட்டிக்கொண்டு முதுகில் ஒன்று வைத்து உள்ளே இழுத்துக் கொண்டுபோய், கட்டாயமாகத் தன் வலிவுகொண்டு உட்கார வைத்தான். அவசர அவசரமாகத் திரும்பினான். இன்றுபோல்தான் அன்றும் அங்குள்ளோர் யாரையும் அவன் திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. அன்றைய நிகழ்ச்சி ஒரு புறம். தன் அலுவலுக்கு—மனப்போக்குக்கு — குந்தகம் வந்துவிட்டதே என்ற பரபரப்பு ஒருபுறம்.

அவன் வெளி வாயிலைத் தாண்டிக்கொண்டிருந்தான். உட்கார வைக்கப்பட்ட தங்கை அழுது பேரொலி கிளப்பிக்கொண்டு அவனைப் பின் தொடர்ந்து ஓடிவந்தாள். ஆத்திரம் அவனுக்கு மிதமிஞ்சிவிட்டது. முதுகில் நன்றாக நாலு வைத்து, மறுபடியும் இழுத்துக்கொண்டுபோய் உட்கார வைத்தான். குழந்தை மேலும் அடம் பிடித்துப், பின்னும் உரக்க அடித்தொண்டையில் கத்தத் தொடங்கிவிட்டது. அந்தப் பள்ளிக்கூடத்தையே அவன் சிறுவர்களின் சித்திரவதைக் கூடமாக—முழுதுமாக—மாற்றிவிட முனைந்துவிட்டவன்போல், பக்கத்தில் கிடந்த — கரும்பலகையில் எழுதியுள்ளதைச் சுட்டிக்காட்டப் பயன்படுத்தப்படும் குச்சியை எடுத்துக்கொண்டு தன் தங்கையைச் சாட முனைந்தான்.

“வேண்டாம், வேண்டாம்! பள்ளிக்கூடத்தில் குழந்தைகளை அடிக்கவேகூடாது என்பது கட்டளை. நீங்கள் மாட்டை அடிப்பதுபோல் இந்தச் சிறுகுழந்தையைப்போட்டு அடிக்கின்றீர்களே! நல்ல வேளை, தலைமை ஆசிரியையும், மற்றவர்களும் இன்னும் வரவில்லை. அவர்கள் யாராவது இருந்தால் என்னைப் பயிற்சியிலிருந்தே விலக்கிவிடுவார்கள். உங்கள்மீது குற்றம் சாட்டி வழக்குத் தொடுத்துவிடுவார்கள்.”

“வரட்டும்; வரட்டும் அவர்களும். அடித்தால்தானே அப்படிச் செய்வார்கள். இங்கேயே கொன்றுபோட்டுவிட்டுப் போனால்......” என்று பின்னும் குச்சியை ஓங்கினான் கன்னியப்பன். அந்த அடி குழந்தைமீது படாமல் ஒரு கரம் நீண்டு தடுத்தது. அது மலர்க்கரம். அக்கரம் கடிகாரம்கூடக் கட்டிக்கொண்டிருந்தது. கன்னியப்பன் ஓங்கிய அடி நின்றுவிடவில்லை. பட்டது. குழந்தைமீது அல்ல. அந்த மலர்க்கரத்தின் மீதும் அல்ல.—அப்படிப் பட்டிருந்தால், அந்த மலர்க்கரம் ஒடிந்தே போயிருக்கும். அந்த அடி கடிகாரத்தின்மீது வீழ்ந்தது. கடிகாரத்தின் கண்ணாடி தூள் தூளாயிற்று.

கன்னியப்பனின் ஆத்திரம் அடங்கியது. அடங்கியது மட்டுமா? அவன் உள்ளம் தன் இருப்பிடத்தை வேதனைக்கே மாற்றிக் கொண்டுவிட்டது. அதுவரை தன்னையும், தன் தங்கையையும் தவிர, அந்தப் பள்ளியிலிருந்த எல்லாரும், எல்லாமும் உயிரற்ற பொருள்கள் என்ற போக்கில் நினைத்துக்கொண்டே கன்னியப்பன் அப்போதுதான் அவனைத் தடுத்த அந்த ஆசிரியையை ஏறிட்டு நோக்கினான்.

பொறுத்தருள வேண்டும். ஆத்திரத்தாலும், அவசரத்தாலும் பெருந்தவறு செய்துவிட்டேன். கடிகாரம் பழுதுபட்டுப் போய்விட்டதா? எங்கே பார்க்கலாம்.”

கையைப் பற்றிக் கடிகாரத்தைக் கழற்றவே முனைந்தான் கன்னியப்பன். அவனுக்கிருந்த படபடப்பில் தான் செய்வது என்னவென்று தோன்றாமலே, அவ்வாறு அவன் செய்ய முனைந்தான். அவளுக்குமா படபடப்பு! அவள் கையை உதறிக்கொண்டு அப்பால் நகர்ந்தாள். “வேண்டாம். நானே கழற்றுகிறேன்” என்றபடி. அவள் எழில் முகம் குங்குமம் வாரி இறைக்கப்பட்ட வண்ணத்துக்கு மாற்றலாகிக்கொண்டது.

அவன் அவளை ஏறிட்டு நோக்கினான், அவள் ஒரு ஆசிரியைபோல் அல்லாமல் கல்லூரி மாணவி போல் தென்பட்டாள்.

ஆமாம். அந்தப் பள்ளி ஒரு மாதிரிப் பள்ளி. அவள் ஒரு மாணவ ஆசிரியை.

கடிகாரத்தை அவள் கழற்றினாள். கொடுக்க மனமில்லாமல் அவனிடம் அதை நீட்டினாள். அவன் அதை வாங்கிச் சட்டைப் பையில் போட்டுக்கொண்டு கிளம்பினான்.

“என்ன, கடிகாரத்தை நீங்கள் கொண்டுபோகின்றீர்களா?” அவள் இருவகைத் தடுமாற்றத்தோடு கேட்டாள். ஒன்று 'அவன் முன்பின் தெரியாதவனாயிற்றே! அவனை நம்பிக் கடிகாரத்தை அவனிடம் ஒப்படைத்தால், அதன் கதி என்னாகுமோ, அது திரும்பி வருமோ'

என்பது. பிறிதொன்று 'அவன் நடையைப்போல், உடையைப் போல் நல்லவனாக, நம்பத் தகுந்தவனாக இருந்தால், தற்செயலாகப் பழுதடைந்துபோன கடிகாரத்தை அவன் தலையில் கட்டி, அவனையே பழுதுபார்த்துக்கொண்டு வரும்படி செய்வது முறையாகுமா' என்பது.

“இன்று மாலையே பழுதுபார்த்துக்கொண்டு வந்து தருகிறேன். நான் முன்பின் யோசிக்காமல் செய்த தவறைப் பொறுத்துக் கொள்ளுங்கள்.” என்று சொல்லிக் கொண்டு அவன் நகர்ந்தான்.

மாலையில் கன்னியப்பன் திரும்பி வருவதற்குள், பள்ளி மூடப்பட்டு விட்டது. அவளை எங்குபோய்த் தேடுவது என்று ஒருகணம் திகைத்தவன் 'ஓகோ, அவள் பயிற்சிப் பள்ளியில் பயில்பவள் தானே — அங்கிருப்பாள்' என்று தனக்குள் கூறியபடி அப்பக்கம் நடந்தான். அங்கு போனபிறகுதான், மாதிரிப் பள்ளி மூடப்படும் வேளையிலேயே பயிற்சிப் பள்ளியும் மூடப்பட்டுவிடும் என்பதை நினைவுபடுத்திக்கொண்டான். 'அவளை எங்கு தேடுவது? எப்படிப் பார்ப்பது?' என்ற எண்ணத்தில் ஆழ்ந்தவனாக மெல்ல நடந்தபடி வெளி வாயிலைத் தாண்டினான். பார்வையை நேராகப் பாட்டைமீது செலுத்தியபடி அசதியுற்றவன் போல் சென்றுகொண்டிருந்தான்.

அவள் வாயிலுக்கு அப்பால் பாட்டை ஓரமாக ஒதுங்கியபடி நின்றுகொண்டிருந்தாள் — தன்னை அவன் கண்டுகொள்கின்றானா என்று பார்ப்பவள்போல். உலகத்து அனுபவங்களில், செய்திகளில் அவர்கள் இருவரும் குழந்தைகள். வாழ்க்கை அவர்களுக்குத் தெரியாததொன்று. குழந்தைகள் என்று மாநகர் குறிப்பிடும் சின்னஞ்சிறு மதலைகள், 'தாங்கள் குழந்தைகளா, வளர்ந்துவிட்டவர்களா' என்று எண்ணுதல் இல்லாமல் விளையாடுகின்றன. இவர்கள் —கன்னியப்பன், பூவரசி போன்றவர்கள் — முழு வளர்ச்சி கண்ட தோற்றத்தில் தென்பட்டாலும், தாங்கள் பெரிய மனிதர்கள் இல்லை எனும் எண்ணத்தோடு எப்படி இயங்குகின்றார்களோ, அவ்வாறே தாங்கள் சின்னஞ்சிறு குழந்தைகள் அல்ல என்ற எண்ணமும் அவர்கள் உள்ளத்தில் குடிகொண்டிருக்கிறது. இந்த மாறுதல்கூட அவர்கள் எண்ணத்தில்தான் — அதுவும்எப்போதோ ஒரு தடவை. ஆனால் அவர்களின் செயல் குழந்தைச் செயல். வேண்டுமானால் அவர்கள் உள்ளத்தில் ஓரளவு கபடம் வந்து குடிபுகுந்திருக்கலாம். எனவே அவர்கள் இருவரும் 'நாம் விளையாடுகிறோம்' என்ற எண்ணம் இல்லாமலே இப்படி 'ஒளிந்து — பிடிக்கும்' விளையாட்டு விளையாடியதில் விந்தையொன்றும் இல்லை.

கன்னியப்பன் தன்னைத் தாண்டிக்கொண்டு போகும்வரை மௌனமாக நின்ற பூவரசி, அவன் சற்று எட்டி நடந்ததும் 'களுக்' என்று பின்னால் நின்றபடி சிரித்தாள். கன்னியப்பன் திரும்பிப் பார்த்தான். அவன் குபீரென்று சிரிக்கவில்லை. இலேசான புன்னகையை அரும்பவிட்டான். மனத்துள் கப்பி நின்ற கலக்கம் பறந்தோடியது.

மேலே விவரிக்கவேண்டுமா? அன்று தொட்டு அவர்கள் நட்புப் பூண்டோராயினர். நாள்தோறும், நாள்தோறும் ஒருவரை ஒருவர் கண்டனர்; பேசினர்; அளவளாவினர். ஆமாம். அவர்கள் ஒருவர் மீது ஒருவர் காதல்கொண்டுவிட்டனர்.

கன்னியப்பனின் பெற்றோர், இந்த இளங் காதலரின் விருப்பு வெறுப்புக்கேற்பத்தங்கள் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்ள வேண்டுமென்பது அவர்தம் குறிக்கோள். அதன் வழி அவர்கள் செயல்பட்டார்கள். அந்தக் குறிக்கோளுக்கு, அதாவது கன்னியப்பனுடைய பெற்றோரின் குறிக்கோளுக்கு, கன்னியப்பன்-பூவரசி ஆகிய காதலரின் குறிக்கோள் குறுக்கே நின்றது. எது குறுக்கே நின்றால்தான் யாருக்கென்ன? அவரவர் நலன், அவரவர் குறிக்கோள், அவரவர் எண்ணம் உள்ளத்தில் வந்து, சூழ்ந்து, நிறைந்து கப்பிக்கொண்டு இடக்கும்போது மற்றதைப்பற்றி எண்ண நேரமேது? இடம் ஏது, வகையேது? இரண்டு எண்ணங்கள், இரண்டு ஆசைகள், இரண்டு குறிக்கோள்கள் ஒன்றோடு ஒன்று மோதிக்கொள்ளும்போது, அல்லது ஒன்றை ஒன்று சேர்ந்து கொள்ளும்போது இரண்டுக்கும் இடைப்பட்ட செய்தியொன்று பொதுக் குறிக்கோளாகத் தலை எடுப்பது மிகச்சிறுபான்மையாகத் தானே! பெரும்பான்மை ஒன்றையொன்று முறியடித்து வெற்றி

# நூல்கள்--
# வழிபாட்டிற்கல்ல - அறிவுபெற.

மதகுரு ஒருவர் பண்டித நேரு அவர்களிடம் ஒரு மத சம்பந்தமான கையெழுத்துச் சுவடியைக் கொடுத்து,

“இதனை நீங்கள் வைத்து வழிபட்டால் உங்களுக்கு மோட்சம் கிடைக்கும்”

என்று கூறினாராம். அந்தச் சுவடி 6000 ஆண்டுகட்கு முன்னர் எழுதப்பட்டதென்றும், “நாகார்ச்சுன” என்ற பெயரைக் கொண்டதென்றும், அந்த மதகுரு பண்டித நேரு அவர்களிடம் தெரிவித்தாராம். அதற்குப் பண்டித நேரு அவர்கள்,

**“நூல்கள் இயற்றுவது, அவற்றை வழிபட்டு மோட்சம் அடைவதற்கல்ல. அவற்றால் அறிவு பெறவே”**

என்றுகூறி அந்தச் சுவடியை மதகுருவிடம் திருப்பிக்கொடுத்து,

“இதனை வேறு யாராவது படித்து வழிபடுபவர்களுக்குக் கொடுங்கள்”

என்று கூறியுள்ளார்.

காண்பதில்தான் தீவிரம் பெறுகிறது. வலிமையுள்ளது தானே எங்கும் வெல்கிறது? அந்த வலிமை எப்படி வந்தது? வருகிறது? அதைப்பற்றி யாருக்கு அக்கறை? மனிதன் மனிதனாக வாழ்வதாகச் சொல்லிக்கொண்டாலும் சரி, அவன் மிருக வாழ்வு நடத்துவதாக எண்ணிக்கொண்டாலும் சரி வலிமைதானே வெல்கிறது! 'அங்கு அன்பு இருக்கிறதோ, வெறுப்பு இருக்கிறதோ! பகை இருக்கிறதோ, நட்பு இருக்கிறதோ! அறமோ, உண்மையோ, பண்போ, நன்மையோ எது இருந்தால்தான் என்ன! இல்லாவிட்டால் என்ன! வலிமை இருக்கின்றதா? அது ஒன்றே போதும்' என்பதுதானே இன்றைய உலகத்தியற்கை. எனவே கன்னியப்பனின் பெற்றோர் வென்றனர். கன்னியப்பன வளைந்து கொடுத்தான்.

பூவரசியைப் பொறுத்தவரை, அவள் பெற்றோர் வளமிக்க இருநிதியம் படைத்தோரல்லர்; ஏழைக் குடியினர். தங்கள் ஒரே பெண்ணின் விருப்பு, வெறுப்பே தங்கள் விருப்பு, வெறுப்பு என்ற போக்கில் எதையும் புரிவோர், எண்ணுவோர். இம்முன்னிலைகள்கொண்டு—அவள்தன் எண்ணத்தை, ஆசையை நிறைவேற்றிக்கொள்ள வழியும், வாய்ப்பும் இருந்தது. இருந்து என்ன பயன்! ஒன்றும் நிறைவுபெறவில்லையே! செயல்படவில்லையே!

பூவரசி இடிந்துபோனாள். நெடுமிசையிலிருந்து தூக்கி எறியப்பட்டது அவள் உள்ளம். அவள் ஆசையும், எண்ணமும் கண்ணெதிரில் சிதைந்து பொடியாகிக்கிடந்தன. அவளைப்பார்த்து அவை எள்ளி நகைத்தன.

அவள் மட்டும் எண்ணியிருந்தால், தன்போக்கை மாற்றிக்கொண்டிருக்கலாம். பொய்த்துப் போய்விட்ட தன் பொன்னான ஆசைக்குப் புதிதானவொரு புகலிடம் தேடிக் கண்டிருக்கலாம்; கொண்டிருக்கலாம். ஆறுதலும், தேறுதலும் சொல்லவந்த அவள் தன் பெற்றோர் செப்பிய வழியில், அழைத்த வழியில் சென்றிருக்கலாம்.

அந்த வழியினை விரும்பவில்லை அவள். அதன் முன்னிலை அவள் பெண்மையின் திண்மையா? அல்லது வழிவழியாக இந்த நாட்டில் வழங்கிவரும் பெட்பு என்கின்றார்களே.—அதுதான், இந்தத் திருநாட்டின் எல்லார்க்காகவும் எல்லாராலும் ஏற்படுத்தப்பட்டுப், பெண்மைபால் தனித் தன்மையாக இலங்கிவரும் பண்பாடாம் வெற்பு என்கிறார்களே, அதுவா? அது பூவரசிக்குத்தான் தெரியும்.

அவ்வாறே தன்னைச் சுற்றிச் சூழ்ந்து கிடந்த ஆரவாரப் பெருக்கினால் கன்னியப்பன் பூவரசியை மறக்கும்படி செய்யப்பட்டானா, அல்லது அவன் தானே வலிந்து அவளைமறந்து கொண்டுவந்தானா? அல்லது அவளை உள்ளத்தில் இருத்திக்கொண்டே, அவளைப் பற்றி எண்ணாதவனைப்போல் வெளிக்குக்காட்டி, மற்றவர்களின் ஆரவாரக் கடலில் தானும் கலந்து இன்பம் துய்ப்பவனைப்போல் நடித்துக் காட்டிக்கொண்டு கிடந்தானா என்பனவெல்லாம் கன்னியப்பன ஒருவனே அறிவான். அவற்றை அவனே சொல்லவல்லான்.

எப்படிக் கூட்டிக் கழித்துப் பெருக்கி வகுத்தாலும் கன்னியப்பன் கோழை என்கிறீர்கள். அவன் வாக்குத் தவறியவன் என்கிறீர்கள். இன்னும் சற்றுக் காரமாக அவன் 'துரோகி' என்கிறீர்கள். அதே வேளை அந்த மடக்கொடியாம் பூவரசி திண்ணிய உள்ளங்கொண்டவள். மங்காத—மாறாத எண்ணங்கொண்டவள். வழிவழியாக நம்மவர் கடைப்பிடிக்கும் பண்பாட்டை விளங்கவைக்க வந்த நந்தாவிளக்கு என்கிறீர்கள். அவற்றைப்பற்றி எல்லாம் யார் கவனிக்கிறார்கள்? எது சட்டைசெய்கிறது?

காலம் தன்பாட்டிற்கு ஓடிற்று. அது நொடிக்கு நூற்றிரண்டாயிரம் யோசனையாக ஏழாண்டுகளைத் தள்ளிக்கொண்டு போய்விட்டது. அப்பப்பா, அந்தக் காலவெள்ளம் கன்னியப்பனை எங்கெங்கெல்லாம் இழுத்துக்கொண்டு போய்விட்டு வந்துள்ளது! அவனுடைய பழைய மிடுக்கு எங்கே? தடபுடல் எங்கே? ஆரவாரம் எங்கே? செல்வம் எங்கே, சீர் எங்கே? பெற்றோர் எங்கே? அவனைப் பின்தொடர்ந்து, சுற்றிச் சுற்றிவரும் மற்றோர் எங்கே? எல்லாவற்றையும், எல்லாரையும் ஒன்றாக அடித்துக்கொண்டு போன இந்தக் காலவெள்ளம் இவனை மட்டும் கரையில் ஒதுக்கித் தள்ளிவிட்டு, அவற்றை எல்லாம், அவரை எல்லாம் அடித்துக் கொண்டே போய்விட்டதே! அப்பப்ப, இந்தக் கால வெள்ளத்திற்குத்தான் எத்துணை ஆற்றல்!

எதிரில் நின்ற பூவரசியை நேருக்குநேர் பார்க்க நாணி, கூனிக் குறுகி எண்சாண் உடம்பும் ஒரு சாண் ஆகிவிட்டான் கன்னியப்பன். அவளைப் பார்ப்பதற்கு அவன் அடைந்த வெட்கமோ, நாணமோ அவ்வேளை அவ்விடத்திலே அவனைக் கொன்றுபோட்டு விடவந்திருந்தால், அதனை அவன் மனமார ஏற்றுக்கொண்டிருப்பான். அப்படி நிகழவில்லையே! அந்த வெட்கமோ, நாணமோ, அவனை

## சிலை வேண்டாம்—மண்டபம் கட்டுக.

மறைந்த பண்டித மோதிலால் நேருவைப் போன்றதொரு சிலை-சலவைக் கல்லால் செய்து, அலகாபாத்திலுள்ள ஆல்பிரட் பூங்காவில் வைக்கும் விருப்பத்தைப் பண்டித நேரு அவர்களிடம் தெரிவித்தபோது, அவர்,

> "பெரிய மனிதர்களுக்குச் சிலை செய்து வைப்பதைவிட, அவர்கள் பெயரால் ஒருபொது மண்டபம் கட்டி, அதைப் பொதுமக்கள் பயன் படுத்தி மகிழும் வகையில் செய்வது மிகவும் நல்லது"

என்று கூறியுள்ளார்.

## விற்பனையாளர்கள் கவனத்திற்கு

8—1—60-ல் "திராவிட நாடு" இதழ் வெளிவராதென்பதனைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்
"திராவிட நாடு"

வைத்து வாட்டியபடி உயிரைமட்டும் விட்டுவைத்துக்கொண்ருந்ததே!

அவள் அவனை ஒரு முறை ஏறிட்டுநோக்கினாள். "உங்களுக்கா இந்தக்கோலம்? ஐயகோ! அடிமைத் தொழில்புரிந்து பிழைக்க வேண்டும் கட்டமா உங்களை வந்து அண்டிக் கொண்டுவிட்டது!" என்று அலமந்தது அந்தப் பார்வை.

கன்னியப்பன் அங்கே நிற்கவில்லை. 'போஇறேன' என்று சொல்லவில்லை. போய்விட்டான்.

அந்த மதலை — அதுவரை தந்தையின் கால்களைப் பற்றிக்கொண்டு விடாது நின்ற அவன் குழந்தை, அவனைவிட்டு விலகி நின்றது. அவன் விரைந்து போகின்ற போக்கினை வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றது. பூவரசியும் அவ்வாறே அவன் போகும் திசையை வெறித்துப் பார்த்துக்கொண்டு நின்றாள். அவள் உள்ளத்தில் முழுமையும் நிறைவும் கொண்ட அமைதியும் இல்லை; குழப்பக்கலக்கமும் இல்லை. அங்கே அப்பட்டமான வெறுமையோ, அதன் மாற்றுத் தன்மை தானோ காணப்பெறவில்லை. அவற்றை எல்லாம் தாண்டிப் போய் விட்டதொரு சமநிலை, அமைதி அல்லது வெற்றமைதி அங்கே நிலவி நின்றது.

அவள் அந்தக் குழந்தையின் பக்கம் திரும்பினாள். "பாப்பா, வாம்மா! இப்படிவந்து உட்கார்" என்று அவள் கூறுவதை எதிர்பார்த்திருந்தது போல், அது அவள் அருகிற் சென்றது. அவள் அதனை ஆர்வத்துடன் பற்றி அணைத்துக்கொண்டாள். அதுவும் அவளுடன் ஒட்டிக்கொண்டு விட்டது. தன் தந்தைக்கும் அவளுக்கும் அன்றொரு நாள் இருந்து வந்த உறவினை அந்தக் குழந்தை இன்று கண்டுகொண்டுவிட்டதோ?

"பாப்பா உன் அம்மா வீட்டில் இருக்கிறார்களா?" பூவரசிக்கு ஏனோ ஒரு சந்தேகம். அதனால் அப்படிக் கேட்டாள்.

"அம்மாவா, எனக்குத் தெரியாதே!"

அந்தக் குழந்தை தன் பிஞ்சுக் கரங்களை விரித்துக் காட்டிய தன்மையைப் பரிதாப நிலை என்றுதான் சொல்லவேண்டுமா?

"ஓ! அப்போ உங்கள் வீட்டில் யார் யார் இருக்கிறார்கள்?"

"நான் இருக்கிறேன். எங்க அப்பா இருக்கிறார். தினம் தினம் ஓட்டலிலே இருந்து சாப்பாடு கொண்டுவருவான் பாரு ஓட்டல் பையன், அவன் ஒரோரு நாளைக்கு எங்க வீட்டிலே. தாழ்வாரத்திலே படுத்திருந்துவிட்டுப் போவான்."

அவனிடம் கேட்கவேண்டுமென்று எவற்றை எல்லாமோ அவள் எண்ணினாள். அவற்றை அந்தக் குழந்தை மூலம் தெரிந்துகொண்டுவிடலாமென்று பிறகு முடிவு கட்டினாள். இப்போது அந்தக் குழந்தை சொல்லிய செய்தியே போதும். முற்றும் அவள் அறிந்துகொண்டாள். போதும் அவ்வளவு கேட்டது.

நண்பகல் அவன் வருவான் என்று எதிர்பார்த்தாள். அவன் வரவில்லை. ஓட்டல் பையன் வந்தான்—குழந்தையை உணவுக்கு அழைத்துச் செல்ல. குழந்தை போகவில்லை. "நான் இங்கேயே சாப்பிட்டுவிட்டேன்" என்று தலையை ஆட்டிக்கொண்டு அது சொல்லிற்று.

மாலையில் அவனைச் சந்திக்கும் நிறை விழைவோடு காத்திருந்தாள் அவள். உடைந்துபோன பழம் படகு ஒன்று செப்பனிடப்பெற்று, புதுமை மெருகுடன் விளங்குவது போலவும், அது பொன்னிப் புதுப் புனலில் வெள்ளோட்டமிடப்படுவது போலவும் விந்தைக் கனவொன்று கண்டுகொண்டிருந்தாள் அவள் விழித்த கண் விழித்தபடி.

மாலை வந்தது. ஆனால் அவன் வரவில்லை. குழந்தையை அழைத்துச் செல்ல நண்பகல் வந்த பையனே வந்தான். அவள் கனவு கலைந்தது. எனினும் அவள் உள்ளம் அலமந்து போகவில்லை. 'அவன் ஏன் வரவில்லை?' என்ற கேள்வி மட்டும் உள்ளத்தே எழுந்து எழுந்து தணிந்தது.

மறுநாள் கன்னியப்பன் அப்பக்கம் காணப்படவில்லை. குழந்தையும் வரவில்லை. வாரம் ஒன்று கடந்தபிறகு அவள் கேள்விப்பட்டாள்—அவன் வேறு எங்கோ மாற்றிக்கொண்டு போய்விட்டான் என்று.

குழம்பிக் கலங்கி, அலை எழுந்து, அலைக்கழிவு பெற்று முடிவில் எவ்வாறோ அமைதிகண்ட நீர்நிலை நீண்ட இடைவெளிக்குப்பின் மறுபடியும் சற்றே அலை எழுந்து குழம்பிற்று. ஆனால் கலங்கிப் போகவில்லை. விரைந்து அமைதி கண்டுவிட்டது.



# மலையும் மழையும்!

[ சா. வே. பாண்டியன் ]

நான் வியந்தே போனேன்!

ஆம்! மலையின் தோற்றம் அப்படித்தான் இருந்தது. வானளாவும் உயரம்! இரு துருவங்களையும் இணைத்தாற்போன்ற நீளம்!

"மலைபோன்ற உண்மை" என்று மலையை உவமானமாகக் கூறுகிறோம். அது அப்பழுக்கற்றது என்பது அதன் அருகில் நின்று பார்க்கும்போதுதானே தெரிகிறது!

மாமலைக்கு நிகர் அதுதான்! நான்தான் "மலை" என்று நெஞ்சு நிமிர்ந்து நிற்கிறது. மனித இனத்தை நோக்கிச் சவால்விடுகிறது!

யார்தான் அதற்கு இடர்விளைவிக்க முடியும்! மரங்களெல்லாம் "நான்தான் மூத்தவன்" என்று காட்ட ஒன்றுக்கொன்று போட்டியிட்டு வளர்ந்து பார்க்கின்றன! முடிவில் தோல்விதான்-அவைகளுக்கு!

குருவிகள் "மலைமேலே நான்" என்று போட்டியிட்டுப்பறந்தாலும் முடிவதில்லை! அப்படிப்பறந்தாலும் அது நீடுநின்றநிலை இல்லை!

"வானத்தைக் கிழிக்கும் நான் உன்னை ஏன் பிய்த்தெறியமுடியாது" என்று வேகமாக முட்டிய வானூர்தி ஒன்று உடைந்து சுக்குநூறாகிக்கிடந்தது, மலை அசைந்து கொடுக்கவில்லை!

ஒருபகுதியில் மனிதர் பலர் வெட்டுவைத்துக் கல் பெயர்த்துக் கொண்டிருந்தனர்! அது அதைப் பற்றி இலட்சியம் செய்ததாகத் தெரியவில்லை!

யாராலும் அதன் உருவத்தை— அமைப்பை மாற்றவோ — இல்லாது செய்யவோ முடியவில்லை.

இதையெல்லாம் எண்ணிக்கொண்டதால், நான் நமது முன்னோர்களின் வாக்கை மிகவும் புகழ்ந்தேன். "உண்மை" என்ற ஒன்றை வற்புறுத்த — அதற்கு வலுவூட்ட "மலை"யைக் கருப்பொருளாக எடுத்துள்ளனரே!

எவ்வளவு ஆய்ந்த முடிவு இது!

கண்கொட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தேன்! மலை மிடுக்காகத் தெரிந்துகொண்டிருந்தது!

"ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கிறாயே, இதோ நான் என்ன செய்கிறேன் பார்" என்பதுபோல் 'ஓ' என்ற ஆங்கார ஓசையுடன் காற்று வந்து அதன்மேல் மோதியது. நான் திடுக்கிட்டேன்!

ஒலி பயங்கரமாக இருந்தது!

தன் வெறி ஓயும்மட்டும் அடித்துத்துவைத்துப் பார்த்தது காற்று! மலை நின்றபடி நின்றுகொண்டிருந்தது! இங்கும் காற்றிற்குத் தோல்விதான்!

அடக்கமாகிவிட்டது அதன் வேகம்! பயந்துகொண்டதுபோலும்!

கார்மேகங்கள் ஆர்த்தெழுந்து உருண்டு, திரண்டுவந்தன! "உருத்தெரியாமல் குலைத்துவிடுகிறேன்" என்பதுபோல் சீறிவந்தன!

மேகக் கூட்டத்திற்கு மலைமேல் கோபம்போலும்! அதனின் பொலிவும் — வலிவும் அதுசெய்யும் நன்மையும் அதற்குப் பொல்லாப்பை ஊட்டியிருக்கும்போலிருக்கிறது!

அதனால், முதலில் வாய்க்கு வந்தபடி திட்டலாயின! மழை என்ற கண்டனக் கணைகளைத் தொடுத்தன! விடாத மழையால் தனது வசை புராணத்தைக் கொட்டியது!

ஐயோ பாவம்! வசை கேட்ட மாததிரத்தில் மலைபோன இடம் தெரியவில்லை. திட்டினதால் எங்கோ ஓடி, இல்லை அப்படியே அழிந்துவிட்டதுபோலும் அது!

கண்களால் துளாவித் துளாவிப் பார்த்தேன். இருப்பது கண்களுக்குப் படவில்லை!

வசைமொழிகள் நின்றன! ஆமாம் வசை என்ற மழைதான்!

வசைமாரியில் போன இடம் தெரியாமல் போய்விட்டதுபோலும் மலை! மழைக்குப் பின்னர்கூட இருப்பதாகத் தெரியவில்லை!

மேகக் கூட்டத்தின் எக்காளச் சிரிப்பொலி என் கவனத்தை இழுத்தது! கைகொட்டி நகைத்தன! வாய்விட்டு உரக்கச் சிரித்தன! அந்தச் சிரிப்பு இடி ஓசையின் மூலம் கேட்டது.

வெற்றிக் களிப்பு மேகக் கூட்டங்களுக்கு! பளிச் பளிச்சென்று பல்லிளித்துக் காட்டின! அந்த "மின்னலைக்" காண என் கண்கள்தான் கூசிற்று!

மலையின் பெருமை—பீடு எங்கே போயிற்று! சற்று முன்புதான் இறுமாந்து நின்றது! இப்போது... ....ஆற்றங் கரையோரத்தில் நின்ற அரச மரத்தின் கதி அதற்கு...!

நான் மலைத்துப் போனேன்! "அழிக்கமுடியாத—அசைக்க முடியாத ஒன்றல்லவா இது என்று நினைத்தேன்" எனக் கருதிக்கொண்டேன். உண்மைதான் என்ன? நானே கேட்டுக்கொண்டேன்!

"உண்மை இதோ" என்று காட்டுவதுபோல் இருந்தது, பின்னர் நடந்தவைகள்! காற்று மெல்ல வீச ஆரம்பித்தது. இது உண்மை என்ற காற்றுப்போலும்!

மேகக் கூட்டங்கள் செம்மறியாட்டுக் கூட்டங்கள் நகர்ந்து செல்வதைப்போல ஓடிக்கொண்டே இருந்தன! பல்லிளித்த மேகங்களைக் காணவில்லை! இல்லாமல் செய்துவிட்டோம் என்று பெருமைப்பட்டுக்கொண்ட மேகங்களின் சுய உரு இப்போதுதான் தெரிந்தது! அவைகள் இருந்த இடம் தெரியாமல் எங்கோ சென்றுவிட்டன!

மலை முன்போல் ஈடும் எடுப்பாரும் அற்ற நிலையில் நின்றுகொண்டிருந்தது!

அது என்னிடம் "வசைமொழி என்ற மழையாலும், பொய்ச்சொல் என்ற மேகத்தாலும் என்னை மறைத்தாலும் என் உண்மை உருவம் ஒரு சமயம் உண்மை என்ற காற்று வீச ஆரம்பித்ததும் வெளிப்பட்டே தீரும்!" என்று கூறுவதுபோல் இருந்தது.

உச்சி நோக்கினேன்! "இது மலையத்தனை உண்மை" என்பதாக ஆமோதித்துக்கொண்டேன்.

★

# மறைக்கப்பட்ட உண்மை

(எம். என். ஆர்.)

ஊருக்கு வெளியே ஒரு அழகிய ஓடைக் கரையில் அந்த எறும்புப்புற்று இருந்தது. அந்தப் புற்றிலே கோடிக்கணக்கான சிற்றெறும்புகளும், கட்டெறும்புகளும் வசித்தன.

சிற்றெறும்புகள் ஒரு பக்கமும், கட்டெறும்புகள் ஒரு பக்கமுமாக அமைதியாகத் தங்கள் வாழ்க்கையை அப்புற்றிலே கழித்தன.

பனிமண்டிய காலை நேரத்தில் ஒருநாள் எறும்புகள் சோர்ந்து இருந்த சமயம், ஒரு ஓணான் அப்புற்றுக்குள் புகுந்துவிட்டது!

அத்தனை எறும்புகளும் அதைக் கண்டு நடு நடுங்கிவிட்டன! யாவும் பீதியால் வெளிறிப்போய்விட்டன! ஓணான் பயங்கரமாகச் சிரித்தது!

இந்த மழைக் காலத்தை நான் கவலை இல்லாமல் கழிப்பதற்கு, அந்த அழகிய அரண்மனையை ஒரு வழியாகத் தேடிக் கண்டு பிடித்துவிட்டேன்! எறும்புகளும் அவை சேகரித்துள்ள தானிய மணிகளும் எனக்குச் சுவையான உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும்! குளிரிலிருந்து இந்த மாளிகை என்னைக் காப்பாற்றும்!

தனக்குத்தானே அது உரக்கக் கூவிக்கொண்டு, புற்று வளைவுகளிலே அட்டகாசம் செய்தது. அதன் குரல் புற்றுப் பொந்துகளிலே எதிரொலி செய்தது!

கட்டெறும்புகளும் சிற்றெறும்புகளும் தங்கள் கண்களிலே மிரட்சி தோன்ற விதிர்விதிர்த்து நின்றன!

ஒவ்வொருநாளும் அந்த முரட்டு ஓணானுக்குக்கட்டெறும்புகளும் சிற்றெறும்புகளும் பலியாகிக்கொண்டிருந்தன! என்ன செய்வது என்று தெரியாமல் அந்தக் கூட்டமே திணறியது. அவைகளின் அமைதியான வாழ்க்கை ஓணானின், நாவிலே ஊசலாடியது!

மழைக் காலம் வந்தது!

எறும்புகளுக்கு கவலை இல்லை, அவைதான் பருவத்தைக் கணக்கிட்டு உணவைச் சேமித்து வைத்திருக்கின்றனவே......!

ஆனால் மிகவும் பரிதாபம்!

ஓணான் அவைகளுக்குக் கட்டளை இட்டது! அவைகள் சேமித்து வைத்துள்ள தானியங்களையும் அரிசித் துணுக்குகளையும், அதற்குக் கொடுத்துவிட வேண்டுமாம்.

இல்லாவிட்டால்—?

இல்லாவிட்டால் என்ற கேள்விக்கே இடமில்லை, எறும்புகளுக்கு என்ன நடக்கும் என்று தெரியும்.

எறும்புகள் முணு முணுத்தன. பட்டினியால் சாகவேண்டியது தானே வழி? உணவில்லாமல் எவ்வளவு நாளைக்கு உயிர் வாழ முடியும்?

மழைக் காலமோ நீண்டு கிடந்தது......! உணவில்லாமலாவது சில நாளைக்கு வாழலாம். ஓணானின் கட்டளையை மறுத்தால்—? எறும்பு இனமே அதன் நீண்ட நாவிலே தங்களுடைய அழிவைச் சந்திக்கவேண்டும்! சிற்றெறும்புகளும், கட்டெறும்புகளும் கூடிப் பேசின. பிறகு சேமித்த உணவில் பாதியை அதற்குப் படைத்தன!

ஓணான் புன்னகை புரிந்தது! எறும்புகளின் ஆற்றல் ஒடுங்கியது!

அடுத்த மழைக் காலமும் இதே நிலைதான்!

ஒவ்வொரு எறும்பும் ஆத்திரமடைந்துவிட்டது. அவைகளின் உடல் அக்கிரமத்தை எதிர்க்க விரைந்தது.

கட்டெறும்புகளும் சிற்றெறும்புகளும் ஒன்ருகத் திரண்டன. அந்தக் கூட்டத்திலே ஒருசிற்றெறும்பு எழுந்தது.

இதுமாதிரி வாழ்வதைவிடச் செத்து மடிந்துவிடலாம்! ஒரு எறும்பு கம்பீரமாகக் கூறியது. ஒவ்வொன்றும் ஆவேசமாக எழுந்தன!

"இனிப் பொறுக்கமுடியாது!"

"வாழ்வதற்குப் பிறந்தோம்! மக்கி ஒடுங்கி மண்டியிட அல்ல!"

"வாழ்ந்தால் நன்ருக வாழ்வோம் இன்றேல் செத்து மடிவோம்!"

"பிறருடைய உழைப்பையும் உயிரையும் நாம் கேட்கவில்லை. நம்முடைய உழைப்பையும் உயிரையும் பிறருக்குக் கொடுக்கவும்மாட்டோம்"

இறுதியாக அவை ஒரு தீர்மானத்திற்கு வந்தன. ஓணானைப் புற்றைவிட்டு விரட்டவேண்டியது. அந்தப் போராட்டத்தில் செத்து மடிந்தால் மகிழ்ச்சியுடன் சாக வேண்டியது!

புற்றுக்குள் ஒரே அல்லோலகல்லோலம்தான். எறும்புப் படைகள் ஓணானைச்சுற்றிவளைத்து அரித்தன. அதன் உடலெங்கும் எறும்புகள். கண்களுக்குள்ளும் காதுகளுக்குள்ளும் எறும்புகள். ஓணான் திணறியது. ஆத்திரமடைந்தது. வாலை அடித்து ஆர்ப்பரித்தது. ஆனல்—?

குற்றுயிரும் குலை உயிருமாக வெளியே வந்து வீழ்ந்தது. பிறகு மெல்ல மெல்ல ஊர்ந்து, புற்றை விட்டு வெகுதூரம் சென்று மறைந்தது!

ஓணானைத்துரத்த நடந்தசண்டையிலே இறந்த எறும்புகளுக்கு வீர வணக்கம் செய்தது எறும்புச் சமுதாயம்!

"புற்றுக்குள் இனி அடக்குவதற்கும், மிரட்டுவதற்கும் ஆள் இல்லை. எல்லோரும் ஓர் நிலை என்ற நிலைமை உண்டாகிவிட்டது. இனி நாமெல்லோரும் ஒற்றுமையாக இருந்து புற்றுக்குப்புதிய ஒளி தருவோம்" எறும்புகள் சொல்லி மகிழ்ந்தன.

"எல்லோருமா?" சந்தேகத்துடன் சிற்றெறும்புக்கூட்டத்தில் ஒருசில சலசலத்தன.

"ஆமாம்!" மற்ற எறும்புகள் அவைகளின் வாயை அடக்கின!

மழைக்காலத்தைக் கருதி சிற்றெறும்புகள் புதிய பொலிவுடன், தானியமணிகளைச் சேகரித்தன. வெகு தொலைவிலிருந்துகூட, கால்கள் கடுகடுக்க உடல் சோர்ந்து தள்ளாட—ஆனால் தளராத ஊக்கத்துடன் தானியம் புற்றுக்குள் கொண்டுவந்து சேர்க்கப்பட்டது!

அளவுக்கு மீறி உழைத்தன சிற்றெறும்புக்கூட்டம்! கடைசியாகச் சேகரித்த உணவைப்பார்த்து அவை புன்னகை புரிந்தன!

"இதைப் பறித்துவிட ஒருவன் இங்கு இல்லை! உழைப்பின் பலன் நமக்குத்தான்."

அவை நிம்மதியாகப் பெருமூச்சு விட்டன.

மழை ஆரம்பித்துவிட்டது. கவலைப்பட என்ன இருக்கிறது? ஆனால்?

கட்டெறும்புகள் சிற்றெறும்புகள் வசிக்கும் பகுதிக்கு வந்தன. சேமித்த உணவை கவ்விக்கொண்டு நகர்ந்தன!

சிற்றெறும்புகளுக்கு ஒன்றும் புரியவில்லை. அவை வெப்பமான மணலில் விழுந்தாற்போல் துடித்தன.

ஏன்? ஏன்? ஏன்?

ஒரு எறும்பைத் தடுத்து நிறுத்தியது ஒரு சிற்றெறும்பு. "ஏன் உணவை எடுத்துச் செல்கிறீர்கள்?"

"உணவு பற்றுக்குறை, எல்லோரும் பகிர்ந்து சாப்பிடவேண்டியது தானே? நீங்கள் வேறு, நாங்கள் வேறா? எல்லோரும் இந்தப் புற்று வாசிகள்தானே?

மௌனமாக நின்றன சிற்றெறும்புக் கூட்டம்! ஆனால் அவை மனதில் ஏதோ ஒருவித சோக உணர்ச்சி அலைமோதியது!

அவை தங்கள் மனதிற்குள்ளேயே சமாதானம் செய்துகொண்டன. எப்படியாவது நமது கூட்டம் அழியாமல் இருந்தால் சரி தான்!

ஒருவனை விரட்டி அடித்தும், நிலைமை பழையபடியேதான் இருந்தது!

பசியும் பட்டினியையும் தவிர வேறு வழியில்லையா?

துக்கமும் துயரமும்தான் நிரந்தரமா?

மழை ஓய்ந்தது. வெளி உலகின் இனிய மலர்ச்சிக் குரல் புற்றுக்குள்ளே கேட்டது!

சிற்றெறும்புகள் சுருசுருப்படைந்தன. தீவிரமாகத் தங்கள் வேலையைத் தொடங்கின.

உழைப்பு! உழைப்பு! உழைப்பு!

கடினமாக உழைத்தன, என்ன உழைத்தும் எறும்புகளின் தேவை பூர்த்தி செய்யப்படவில்லை!

என்ன இது? ஏன் இந்த நிலைமை?

சிந்தனைக்கதிர் பல சிற்றெறும்புகளின் மனதிலே ஊசலாடியது.

"ஐயயோ! மழைக்காலம் வந்துவிட்டதே"

பருவ காலங்களுக்கு எறும்புகளின் வேதனையா தெரியப்போகிறது?

கட்டெறும்புகளும் வந்து சிற்றெறும்புகள், சேமித்த உணவை எடுத்துக்கொண்டு சென்றன!

சில எறும்புகள் கேட்டன "எங்களுக்கு உணவு பற்றுதே! நாங்கள் பட்டினியாகக் கிடக்கிறோமே?" குரலிலே படபடப்புத் தொனித்தது.

கட்டெறும்புகள் ஆச்சரியத்துடன் அவைகளைப் பார்த்தன! "எங்களுக்கா? இதுஎன்ன கேள்வி? நாம் எல்லோரும் ஒன்றுதானே? நம்மில் ஒருவன் ஒருவரும் இல்லையே! எல்லோரும பகிர்ந்துதான் சாப்பிடவேண்டும்!

சிற்றெறும்புகள் கேட்டன "ஆனால் நீங்கள் பட்டினியாக இருப்பதாகத் தெரியவில்லையே?

கட்டெறும்புகள் அலட்சியமாக அவைகளைக் கடந்து சென்றன!

நிலைமை எந்தக்காலத்தையும்விட இப்பொழுது மோசமாக இருந்தது. சிற்றெறும்புகள் நலிந்துஒடுங்கின. வெம்பிக் கண்ணீர் விட்டன. வாழ்க்கை பதர் நெல்லாய்ப் போய் விட்டது.

ஒருசில எறும்புகள் மெல்ல ஒன்றையொன்று பார்த்துக் கூறின. "இது மிகவும் அக்கிரமம்! உழைப்பது நாம்தான்"

சிற்றெறும்புகளில் முக்கியமானவை இவைகளின் பேச்சை அடக்கின "இப்படியெல்லாம் நாம் கூறக்கூடாது. எறும்பு சமுதாயம் ஒற்றுமைக்குப் பெயர் பெற்றது."

அடுத்த மழைக்காலம் வந்து கொண்டிருந்தது. "இந்த மழை நாளிலாவது நிம்மதியாக இருப்போமா?" என்றசிற்றெறும்புகளின் ஏக்கப் பெருமூச்சு அவைகளைச் சுற்றியே ஓலமிட்டது!

மழை நாளில் வழக்கப்படியே தான் நடந்தது!

பாதிக்குமேற்பட்ட சிற்றெறும்புகள் "அக்கிரமம் அக்கிரமம்" எனக் கூவின. மர்மமான இந்த வேதனையிலிருந்து சிற்றெறும்பு சமுதாயம் மீட்கப்படவேண்டும். பொங்கி யெழுந்த அந்தப் பெருங்குரலை அடக்கமுடியவில்லை!

ஒரு எறும்பு கம்பீரமாக எழுந்து உரத்த குரலில் கூறியது "இனிப் பொறுக்கமுடியாது" அதன் குரல் புற்று முழுவதும் பரவி வெளி உலகையும் எட்டியது!

அது தொனி குறையாமல் சிற்றெறும்பு சமுதாயத்தைப் பார்த்து மேலும் கூறியது, "நாம் கீழைப் பகுதியில் வசிக்கிறோம், அவை மேலைப்பகுதியில் வசிக்கின்றன; நாம் சுருசுருப்பாக உழைக்கிறோம், அவை சோம்பேறிகள்; நம் உழைப்பின் பலனை நாம் அடைவதில்லை, ஆனால் நம் உழைப்பில் அவை உல்லாசமாக இருக்கின்றன; நம்முடைய இனம் வேறு, அவைகளின் இனம் வேறு.

இதோ மறைக்கப்பட்ட ஒரு உண்மையை உங்களுக்கு நான் கூறுகிறேன். அவை கட்டெறும்புகள்! நாம் சிற்றெறும்புகள்!

சிற்றெறும்புகள் எல்லாம் அதன் குரலைக் கூர்ந்து கேட்டன! அவைகளின் முன்னே கட்டி இருந்த பிரமாண்டமான திரை அறுந்து விழுந்தது!

அவைகளின் மனதிலே இருந்த குழப்ப இருள் நீங்கித் தெளிந்த புதிய ஒளி பாய்ந்தது!

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

"அம்மா, கொஞ்சம் தண்ணீர் தருகிறீர்களா?"

"போ, போ! தண்ணியாவது ஒண்ணாவது! இதென்ன தண்ணிப் பந்தலுன்னு நினைச்சுக்கிட்டீங்களா? அப்பப்பப்பா, இந்த வெயில் கொளுத்தினாலும் கொளுத்துது. இரயிலுக்கு வர்றவங்களும், போறவங்களும் ஒருத்தர் பாக்கியில்லாமே இங்கேதான் ஓடியாறாங்க தண்ணிக்கு' என்று குனிந்த தலை நிமிராமல், பலகாரத்தைத் தட்டில் அடுக்கியபடி தன் பாட்டில் பேசிக்கொண்டு போனாள் அந்தப் பலகாரக் கடை அற்புதம்மாள்.

"ஓஹோ, இங்கேயும் தண்ணிக்குப் பஞ்சம் போலே இருக்கு!" என்று சொல்லியபடி அங்கேயே நின்றான் பாண்டியன்—முகத்திலடித்தாற்போல் அற்புதம்மாள் பேசிய பேச்சுக்களைப் பெரிது பண்ணிக் கொள்ளாமல்.

அற்புதம்மாள் நிமிர்ந்து பார்த்தாள்.

"என்னப்பா பண்ணுவது! இங்கே தண்ணி கொண்டுவர ஆள் இடையாது. என் வீட்டுக்காரர் ஒரு வாரமாப் படுத்த படுக்கையாக் கிடக்கிறாரு. நான் தண்ணி கொண்டுவருவேனா, பலகாரம் போடுவேனா, வியாபாரத்தைக் கவனிப்பேனா!" அதட்டலும் சினமும் மாறி இப்போது அவள் குரல் பரிதாபமாக ஒலித்தது.

"தண்ணிதான் இங்கே சுலபமாக் கிடைக்குதா! அதுக்கும் மூணு பர்லாங் தொலைவு போகணும். அதோ,—தெரியுது பாரு சேந்துக் கிணறு, அங்கே போய்க் கொண்டு வரணும். நம்மாலே முடியுதா அடிக்கடி போய்க்கொண்டு வர்றதுக்கு! யாராவது ஆள் தேடிப் பிடிச்சிக், கிணத்துக்கு அனுப்பணும். போப்பா — இந்த ஒரு வாரமா நான் படறபாடு நாய்படாத பாடு — உம், ஒருவாரமாகத்தானா! காலம் எல்லாம இப்படித்தான்—'தலை' எழுத்து." பின்னும் அங்கலாய்த்துக் கொண்டாள் அற்புதம்மாள்.

பாண்டியன் சற்று நேரம் சும்மா நின்றான். பிறகு மரத்தடியை நோக்கி நடந்தான்.

அற்புதம்மாள் அவனை விளித்தாள்.

"எப்பா தம்பி, நீ எந்த ஊரு?"

"நமக்குச் சொந்த ஊரு கூத்தூர்ப் பக்கம்."

அவன் எப்படி வந்தான், என் வந்தான் என்றெல்லாம் அற்புதம்மாள் அவனை விசாரிக்கவில்லை. அந்தக் கதை எல்லாம் அவள் கேட்டுக் கேட்டுச் சலித்துப்போன கதை. பழகிப்போன கதை.

"சரி, இங்கே நீ வேலை செய்யறியா?"

பாண்டியன் யோசித்தான்; இந்தச் சின்னப் பலகாரக்கடையில் என்ன வேலை இருக்கப் போகிறது? இருந்தாலும் என்ன கூலி கொடுக்கப் போகிறார்கள் — எதற்கும் இருந்து பார்ப்போம்! இப்போதைக்கு; சாப்பாட்டுப் பிரச்சினை தீரட்டும்.

'சரி அப்படியே ஆகட்டும்' பாண்டியன் தலையை ஆட்டினான்.

வாரம் ஒன்று கடந்தது. தன் மீது சுமந்து பெருகும் வேலைப்பளுவின் பெரும்அளவு குறைந்து விட்ட மனநிறைவோடு நிம்மதியாக மூச்சு விட்டாள் அற்புதம்மாள். பாண்டியன் நன்றாக உழைத்துப் பழகியவன். அந்தச் சின்னப் பலகாரக் கடையில் அவன் செய்து வந்த வேலைகள், வேலைகளாகவே தோன்றவில்லை அவனுக்கு. வேளைக்குச் சாப்பாடு. வசவுகள் இல்லை. அதட்டல், மிரட்டல், அவதிப்படுத்தல், அவமதித்தல், அமைதி குலைத்தல் போன்ற 'பெரிய மனிதச்' செயல்கள் அங்கு இல்லை. அவற்றிற்கு மாறாக இனிய மொழி, அன்புடன் பழகுதல், பண்புடன் நடத்தல் ஆகியன அங்கு காணக் கிடைத்தன. பாண்டியன் வாழ்வில் அது புது நிலை. எதிர்பாராத நிலை. உழைப்புக்கு மதிப்புக் கொடுப்போரும், பிறர் துன்பங்கண்டு எள்ளாமல் இரக்கங்காட்டுவோரும் உலகில் ஏதோ ஒரு மூலையில் இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதைப் பாண்டியன் முதன் முதல் அங்குதான் தெரிந்து கொண்டான். அற்புதம்மாளின் கணவனும் தங்கமானவன் — குணத்தில், பிறரோடு பழகும் தன்மையில், அவனும் நோய் நீங்கிக் குணம் அடைந்தான். அங்கே இருப்பது மெத்தப் பிடித்திருந்தது பாண்டியனுக்கு. ஆனால், அங்கு வேலை இருப்பதாகத் தோன்றவில்லையே! ஏதோ சும்மா இருப்பது போல், உறவினரோடு சேர்ந்து வாழ்வது போல் எண்ணிக்கொண்டு பொழுதைக் கழித்தான் அவன்.

"நீ நல்ல பிள்ளையா இருக்கிறே. இங்கேயே இருந்துவிடப்பா தம்பி. ஏதோ நாங்கள் குடிக்கிற கால் வயிற்றுக் கஞ்சியை நீயும் குடித்துக்கொண்டிரு" என்று பாண்டியனிடம் அற்புதம்மாள் சொன்ன போது, அவள் கணவனும் 'ஆமாம்' என்று தலையாட்டினான்.

ஆனால், அப்படி அங்கே வறிதே வேலையில்லாமல் — ஒரு வகையில் பிறருக்குப் பாரமாகக் காலத்தைப் போக்குவதைப் பாண்டியன் விரும்பவில்லை. ஓயாமல், ஒழியாமல் அவன் உழைத்து, உழைத்துப் பழகிப் போனவன் அல்லவா!

"நான் இங்கே இருப்பதால் உங்களுக்கு ஒரு வகையிலும் நன்மை இல்லையே! அதோடு நீங்களும் அப்படி ஒன்றும் பெரு வருவாய் உடையவர்கள் இல்லையே, அதனால்......"

"வேறே ஊருக்குப் போகிறேன் என்கிறாயா?—பாவம், வேண்டாம்! எங்கு போனாலும் இந்த நாளில் வேலை கிடைக்காது. துன்பந்தான் கிடைக்கும். அதற்குப் பதிலாக இந்த ஊரில் ஏதாவது ஒரு வேலை —வேறு என்ன வேலை, ஓட்டல் வேலைதான் பார்க்கலாம். நீதான் எந்த வேலையும் மானத்தோடு செய்யத் தயாராக இருக்கின்றாயே! அப்படிச் செய்துவிட்டால் நீயும் இங்கிருந்து போகவேண்டியு

## விற்பனையாளர்கள் கவனத்திற்கு

○○○

28-12-60 வரை மலர் தேவையின் எண்ணிக்கை விபரமும், அதற்குரிய முன் பணம் முழுத் தொகையும் அனுப்பியவர்களுக்கு மட்டுமே மலர் அனுப்பப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பொறுப்பாளர்,
"திராவிட நாடு"

தில்லை. நாங்களும் உன்னைப் பார்க்க முடியாமல் இருக்க வேண்டியதில்லை." என்றாள் அற்புதம்மாள்.

அன்று மாலையே புகை வண்டி நிலையத்துக்கு எதிரே இருக்கும் 'பேர் பெற்ற' 'மணி விலாஸ்' முதலாளியுடன் அற்புதம்மாளின் கணவன் பேசினான். மறுநாள் பாண்டியன் அங்கே பரிமாறுவோனாகப் பணியேற்றான்.

திறமையும், சுறுசுறுப்பும், இன்முகமும், விடா முயற்சியும் ஆகிய மிகப் பழைய பண்புகளுக்கு இந்த நாளில்கூட ஓரளவு மதிப்பு உண்டு, அவற்றால் நன்மையுண்டு என்று பாண்டியன் அங்கே பணியாற்றும் காலத்தில் சற்றே கண்டுகொண்டான். சாப்பாடு எல்லாம் போக மாதம் இருபது ரூபாய் அவனுக்குச் சம்பளம் கிடைத்தது. அற்புதம்மாளின் அறிவுரையாலும், பாண்டியனின் அடக்கமான சிக்கனப் போக்காலும் அந்த இருபது ரூபாயில் மாதம் பதினைந்து ரூபாய் அவனால் மிச்சப்படுத்த முடிந்தது.

பாண்டியன் எவ்வளவு சுறுசுறுப்பும், தளரா உழைப்பும் கொண்டவனாக இருந்தும், இரண்டாண்டுகளுக்குமேல் அந்த விலாசில் அவனால் வேலைக்கிருக்க முடியவில்லை. திடீரென்று ஒரு நாள் காய்ச்சல் வந்துவிட்டது பாண்டியனுக்கு. அந்தச் சமயம்—ஓட்டல்களில்—இரயிலடி ஓட்டல்களில் நன்றாக வியாபாரம் ஆகும் சமயம். அதாவது திருமணம், திருவிழா போன்ற நிகழ்ச்சிகளால் பிரயாணிகளின் தொகை புகை வண்டி நிலையங்களில் பெருகி நிற்கும் சமயம். அந்தச் சமயம் பார்த்துத்தானா பாண்டியனுக்குக் காய்ச்சல் வரவேண்டும்!

எப்போதுமே பாண்டியன்மீது கோபங்கொள்ளாத ஓட்டல் முதலாளி, அவ்வேளை அவன்மீது ஆத்திரம், ஆத்திரமாக விழுந்தார். அவர் ஆத்திரத்தால் பாண்டியனின் காய்ச்சலை ஓட்டிவிட முடியுமா என்ன?

சரியாக ஒரு வாரம் கழித்துத்தான் திரும்பவும் ஓட்டலுக்குப் போனான் பாண்டியன்.

"உன்னால் என் பிழைப்பே கெட்டுவிட்டது! என் வாழ்வே பாழாகிவிட்டது! என் தொழிலே நாசமாகிவிட்டது!' என்று அங்கலாய்க்கவில்லை அந்த ஓட்டல் முதலாளி. அந்தப் பொருள்கள் தொனிக்க வாயில் வந்தபடி வசை மாரி பொழிந்தார் அவர்.

அப்படிப்பட்ட வசவுகளை அதற்கு முன் முதலாளியிடம் பாண்டியன் பெற்றவன் இல்லை. அப்படியொரு நிலை ஏற்படுமாறு அவன் நடந்துகொண்டவன் இல்லை. ஆனால் அங்கு வருவதற்கு முன் வேறு யார் யாரிடமெல்லாமோ பெற்றிருக்கிறான் அவ்வகை வசவுகளை. அவ்வேளைகளில் எல்லாம் பொறுமையை உறுதியாக்கிக்கொண்டிருந்தவன், இன்று ஏனோ அதனை இழந்துவிட்டான். அதில் நியாயம்கூட இருந்தது. ஆனால் பாண்டியனைப் போன்றவர்கள் நியாயம் தம்பக்கம் இருந்தாலும், அது இருக்கிறது என்று வாய்விட்டுச் சொல்ல முடியுமா? அப்படிச் சொல்வதனால் அதற்குப்—பாராட்டு வேண்டாம்—பலனை எதிர்பார்க்க முடியுமா, நல்ல பலனை?

வழக்கமான விளைவு அங்கு உண்டாகியது. பாண்டியன் கணக்குத் தீர்த்துக்கொண்டு உணவு விடுதியிலிருந்து வெளியேறினான். நேரே அற்புதம்மையின் பலகாரக் கடைக்கு வந்து சேர்ந்தான். இன்னும் அவன் முழுதுமாக உடல் நலம் பெறவில்லை. எனவே, 'மேலே என்ன செய்யலாம்' என்பதுபற்றி யோசிப்பதை இரண்டொரு நாட்கள் தள்ளிப்போட்டான்.

அப்படிப்பட்ட அந்த நிலையின் போதுதான் நாற்சந்தியில் மூடிக்கிடக்கும் கடையில் மழைக்காகப் போய் நின்றான் அன்று.

அவனுக்கு ஒருயோசனை தோன்றிற்று. நேரே அற்புதம்மாளிடம் வந்தான்.

"மூடிக்கிடக்கும் அந்தக்கடையை வாடகைக்கு வாங்கி நாம் ஏன் அங்கு ஒரு தேநீர்க் கடை போடக்கூடாது?"

"போடலாமே!" எடுத்த எடுப்பில் சொன்னாள் அற்புதம்மாள். அதன் மூலம் அவளுக்குக்கூட ஒருவகையில் இலாபம் இருந்தது.

அந்தக் கடையை வாடகைக்கு விடுமாறு கேட்டபோது, அதன் உரிமையாளரான நல்லமுத்து என்ன சொன்னார் தெரியுமா?

"கடையை வாடகைக்கு விடுகிறேன். இதுவரை பெற்று வந்த வாடகையைவிட உங்களுக்கு இரண்டு ரூபாய் குறைத்துக்கொண்டு வேண்டுமானாலும் விடுகிறேன். ஆனால், ஒரு நிபந்தனை. கடையைத் திடீரென்று காலி செய்துகொண்டு போய்விடக் கூடாது. நீண்ட நாள் இங்கே கடை நடத்தும் திறன் உங்களுக்கு இருக்கின்றதா என்பதை நன்றாக யோசித்துப் பார்த்துக்கொள்ளுங்கள். பிறகு, 'கட்டி வரவில்லை. கடை வேண்டாம்' என்று சொல்லிக்கொண்டு கிளம்பிவிடக் கூடாது."

"திடீரென்று காலிசெய்ய மாட்டோம். நீண்ட நாட்கள் நாங்கள் இங்கு கடை நடத்துவோம்." என்று அற்புதம்மாள் சொன்னாள்; அவள் கணவன் சொன்னான்; பாண்டியன் சொன்னான்.

இப்படி இவர்களிடம் நல்லமுத்து நிபந்தனை போட்டு ஒப்புதல் பெற்றார். உறுதிபெற்றார். ஆனால், இவர்கள் நல்லமுத்துவிடம் எவ்வித நிபந்தனையும் போடவில்லை; போட நினைக்கவில்லை. அதுதேவை இல்லை என்று நினைத்தார்கள் அவர்கள்.

கடை தொடங்கப்பெற்றது ஆரவாரம் இல்லாமல். முதலில் பாண்டியன் ஒருவனே கடையில் இருந்தான், தண்ணீர் கொண்டுவருவது முதல் எல்லா வேலைகளையும் அவனே புரிந்தான். போகப்போக எல்லாவற்றையும் கவனிக்க அவனால்முடியவில்லை. அற்புதம்மாளோ அவள் கணவனோ ஒத்தாசைக்குத் தேவைப்பட்டார்கள். இடையே அற்புதம்மாள், தான் எண்ணித் திட்டமிட்டிருந்தபடி தன் பலகார வாணிபத்தின் ஒரு பகுதியை அந்தத் தேநீர்க் கடையில் தொடங்கினாள். மேலும், மேலும் கடை வளர்ந்துகொண்டு வந்தது. விற்பனை பெருகிக்கொண்டு போயிற்று;—தேநீர்க்கு மட்டுமல்ல, அற்புதம்மாள் தயாரிக்கும் பலகாரத்திற்கும்.

இப்போது அது வெறுந் தேநீர்க் கடையல்ல. ஒரு சிறிய ஓட்டல். அற்புதம்மாள் அவள் கணவன் ஆகிய இருவருமே அங்கு வந்துவிட்டார்கள் அவர்களின் பழைய பலகாரக் கடையை மூடிவிட்டு.

நல்லமுத்து மலைத்துப்போனார். 'அதிகமாகப் போனால் மூன்று மாதங்கள் பாண்டியன் அங்கே தேநீர்க் கடை நடத்துவான். அதற்குமேல் அங்கு விற்பனை சரியாக இராது. கடையைக் காலி செய்துகொண்டு போய்விடுவான்!

என்று எண்ணினர் அவர். இப்போது அது ஓட்டலாகவே மாறிப் போய்விட்டதைப் பார்த்து மலைக்காமல் என்ன செய்வார் அவர்? அக்கம் பக்கத்தில் இருப்பவர்கள் எல்லாம் மூக்கின் மீது விரல் வைத்தார்கள்.

ஒரு நாள் அற்புதம்மாள் சொன்னாள், "தம்பி, நமக்கு ஆள் போதவில்லை. இன்னொரு ஆள் வேண்டும்" என்று பாண்டியனிடம்.

"ஏன், உங்களால் வேலைசெய்ய முடியவில்லையா?"

"கடையில் உள்ள வேலைகளைச் செய்ய என்னால் முடிகிறது. ஆனால், நமக்கெல்லாம் சாப்பாடு வேண்டுமே! அந்தச் சாப்பாட்டு வேலையை, அதாவது சமையல் செய்யும் வேலையைக் கவனிக்க ஓராள் வேண்டும். அதனால்......"

"அதனால் என்ன! ஒரு பொடியனைப்பார்த்துப், பிடித்துப்போட்டு விடலாம்—நல்லனாக"

"என்னப்பா தம்பி, இன்னும் நீ உலகம் தெரியாத பிள்ளையாய் இருக்கின்றாயே!"

பாண்டியனுக்கு ஒன்றும் புரியவில்லை 'அற்புதம்மாள் என்ன சொல்கிறாள்?'

"அதோடு நீ குடியிருக்க ஒரு வீடுகூடப் பார்க்கணும்'

"வீடா? எனக்கா? எதற்கு?— நான்தான் இராத்திரி பகலாகக் கடையிலேயே இருக்கிறேனே!"

"தம்பிக்குப் புரியாத மாதிரியிலே நீ என்னென்னமோ பேசிக்கிட்டுப்போறியே! நாமாகப்பார்த்து ஒரு ஏற்பாட்டைச் செய்தால், அவன் வேண்டாமென்றா சொல்லப்போறான்!" பக்கத்தில் அவர்கள் உரையாடலைக் கேட்டுக்கொண்டிருந்த அற்புதம்மாளின் கணவன் தன் மௌனத்தை உடைத்தான் இப்படி.

"அப்போ நீங்கதான் ஊருக்குப் போய்விட்டு வர்றீங்களா?"

"நான்மட்டும் போனாப்போதுமா? தம்பி வரவேண்டாம்?"

இன்னும் பாண்டியனுக்கு அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்றே புரியவில்லை.

"நான் எதற்கு?" என்று இருவரையும் பார்த்துக் கேட்டான அவன்.

"நீ எதற்கா? பெண்ணைப்பார்க்க வேண்டாமா நீ?"

'—ஓகோ!' இப்போதுதான் புரிந்தது பாண்டியனுக்கு. அவன் ஒன்றுமே பேசவில்லை. அந்த மௌனம் சம்மதத்திற்குக் கொடி காட்டியது. மேலே யாரும் பேசவில்லை. இனி வேண்டுவது செயல்.

*

"எங்கே பாண்டியன்?" என்று கேட்டுக்கொண்டு, ஒருநாள் நல்லமுத்து வந்தார் பாண்டியன் கடைக்கு.

அன்று பாண்டியன் கடையில் இல்லை. மாமனார் வீட்டுக்குப் போயிருந்தான்.

"ஏன் என்ன செய்தி?" என்று முன்னால் வந்து அற்புதம்மாள் வினவினாள்.

"ஒரு முக்கியமான செய்தி சொல்லவேண்டும்! — வேறென்ன செய்தி—இன்னும் ஒரு மாதத்தில் இந்தக் கடையைக் காலிபண்ண வேண்டும் நீங்கள். கடை எங்களுக்குத் தேவைப்படுகிறது. ஒரு மாத முன்னறிவிப்பு! இது கண்டிப்பானது!"

"ஐயோ, இந்தக்கடையை நம்பித் தானே எங்கள் பழைய பலகாரக் கடையைக்கூட விட்டுவிட்டோம்!" என்று அற்புதம்மாள் வார்த்தையால் தன் வருத்தத்தையோ அங்கலாய்ப்பையோ தெரிவித்துக் கொள்ளவில்லை. பெரும் பூகம்பத்தில் சிக்கிக்கொண்டவள்போல் அவள் திகைத்துவிட்டாள்.

நல்லமுத்துவின் மனச்சான்று உறுத்தியது. அவர் மேலே பேசவில்லை, நகர்ந்தார். அவர் கூறிவிட்ட முடிவை மாற்றிக்கொள்ள அவரால் முடியாது. காரணம், அந்த முடிவு அவர் முடித்த முடிவு அல்ல. அவருக்கு வேண்டியவர்கள் தூண்டிவிட்டு, வற்புறுத்தி, ஏவிவிட்ட முடிவு.

இந்த வட்டாரத்திலேயே செல்வாக்குப் பெற்ற பெரிய மனிதர் நல்லமுத்து, அவரை எதிர்த்து நிற்க ஓட்டல் தொழிலாளி பாண்டியனாலோ, அவனுக்குத் துணை நிற்கும் அந்தப் பாட்டாளியர்—அற்புதம்மாள், அவள் கணவன் ஆகியோராலோ முடியுமா என்ன?

நேற்றோடு ஒரு மாத முன்னறிவிப்புக் கெடு முடிந்துவிட்டது. நேற்றோடு பாண்டியன் சுறுசுறுப்பாக, துடிதுடிப்பாக அந்தக் கடையில் இயங்கிவந்த இயக்கம் நின்றுவிட்டது. அதோ பெருங் குழப்பத்தோடு நடுத்தெருவில் நிற்கிறான் அவன். அதோ அற்புதம்மாளும் அவள் கணவனும் மேலே என்ன செய்வதென்று தோன்றாமல் கலக்கத்தில் மூழ்கியுள்ளனர்.

"நாங்கள் எப்படியோ வழக்கப்படி துன்பப்பட்டுக் காலத்தைத் தள்ளி, முயன்று, வாழத்தான் போகிறோம். ஆனால் எங்களை அந்தக் கடையிலிருந்து துரத்திவிட்டுப், பதிலுக்கு வந்து அமர்ந்துகொண்டிருக்கும் பிறர் வாழப் பொறாதவர்களே, அழுக்காற்றுக்காரர்களே, நீங்கள் சிறக்கவும் உயரவும் எத்தனை காலம் வாழ்ந்துவிடுவீர்கள்? உங்கள் உண்மையில்லாத் தன்மையும் நீதியற்ற போக்கும், நேர்மையற்ற செயலும் எவ்வளவு காலம் உங்களைத் தாங்கிப் பிடித்துக்கொண்டு நிற்கும்?" என்று நாற்சந்தியில் தள்ளப்பட்ட அந்தக் கதியற்ற உயிர்களின் வயிற்றெரிச்சல் பெருந் தீயாக மூண்டுகொண்டுதான் இருக்கிறது. அந்தத் தீ இந்த அழுக்காற்றுக் கும்பலைச் சுட்டுப் பொசுக்கி, முடிவில் ஒருபிடி சாம்பல் ஆக்கத்தான் போகிறது!!—அந்நாள் வரும் வரை இந்த அழுக்காற்றுக் கும்பலின் ஆளுகையை எப்படிப் பொறுத்துக்கொண்டிருப்பதோ! அந்நாள் வருவது எந்நாளோ!

★


## பொங்கல் மலர்

# சந்தாதாரர்கள் கவனத்திற்கு

இவ்வாண்டுப் பொங்கல் மலரின் விலை ரூ. 1—50. முன் பணமாக ரூ. 1—50 அனுப்புகின்ற சந்தாதாரர்களுக்கு மட்டும்தான் மலர் பதிவுத் தபால் அனுப்பப்படும். பணம் அனுப்பும்போது சந்தா எண் குறிப்பிட வேண்டும்.

பொறுப்பாளர்.

பதிவு எண். எம். 4642

தொலைபேசி எண்....


[illegible] 15
இதழ் ...118

இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

THE SCHOOL OF ENGLISH LEARNING

# ஆங்கிலக் கல்வி நிலையம்

60, பிராட்வே, மண்ணடி, சென்னை-1.




விவேகத்தின் அத்தாட்சியாக விளங்குவது எழுத்தாளனின் பேனா முனை.
வீரத்தின் சின்னமாகத் திகழ்வது போர் வீரனின் வாள் முனை.
நாட்டின் பாதுகாப்பிற்கு வாளேந்தும் வீரர்கள் தேவைதான். ஆனால், வாளை நம்பிமட்டும் வளமாக வாழ்ந்துவிட முடியாது.
விவேகமற்ற வீரம் ஜீவனற்ற நதியென வரண்டு காணப்படும்.
கத்தி முனை சாதிக்காத காரியங்களைப் பேனா முனை சாதித்துக் காட்டிய வரலாறுகள் பலவுண்டு.
வாள் முனை பிறர் மருட்சியில் மகிழ்வது.
பேனா முனை அனைவர் உள்ளங்களிலும் உவகைக் கிளர்ச்சியை உண்டு பண்ணிப் பூரிப்படைவது.
ஆகவே, விவேகமே வீரத்தைக் காட்டிலும் அதிக பலம் வாய்ந்தது என அறிகிறோம்.
இத்தகைய விவேக பலத்தைக் கொண்டுதான் மனிதன் வாழ்க்கையின் தரத்தில் உயர்ந்தான் என்று சொல்லலாமல்லவா?

தமிழ் எழுதப் படிக்க தெரிந்தவர்கள்

## ஒரே வருடத்தில்

ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தி அடிப்படையோடு இலக்கண ரீதியாக

## இங்கிலீஷ் (தபால் மூலம்) கற்கலாம்

சேர கடைசி தேதி: 10–1–61 } பயிற்சிகள் ஆரம்பம்: 11–1–61

ஆங்கிலத்தில் கருத்துக்களை அமைத்துச் சொந்தமாக எழுதவும் பேசவும் கட்டுரைகள் வரையவும் கடிதப் போக்கு வரத்துச் செய்யவும் முறையாக அடிப்படையோடு கற்பிக்கப்படும். சிறந்த முறையில் இலக்கணப் பயிற்சி அளிக்கப்படும்.

முக்கிய அறிவிப்பு:— (1) சேர விருப்பமுடையவர் கல்வி நிலையத்திலிருந்து அச்சிட்ட மனுவைப் பெற்றுப் பூர்த்தி செய்து உடனடியாக அனுப்பி வைக்க வேண்டும். (2) 16 வயதிற்கு மேற்பட்டவர்களே சேரத் தகுதியுடையவர்கள். (3) ஆதார பூர்வமான ஒப்பற்ற இலக்கணப் பயிற்சி அளிக்கப்படுவதால், ஓரளவு இங்கிலீஷ் தெரிந்தவர்களும் சேர்ந்து திருத்தமாகக் கற்றுத் தமக்குள்ள சந்தேகங்களைப் போக்கிக் கொள்ளலாம். (4) இங்கிலீஷ் ஓரளவு தெரிந்தவர்களுக்குத் தனியாகவும், எழுத்து முதல் ஒன்றுமே தெரியாதவர்களுக்குத் தனியாகவும் பயிற்சி யளிக்கப்படும். (5) இத் தபால் முறையில் படிக்க ஆண்களும் சேரலாம்; பெண்களும் சேரலாம்.

அச்சிட்ட மனுவையும் முழு விளக்கங்களையும் (நயா 8 பைசா) தபால் பில்லை அனுப்பிப் பெறுக.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணாதுரையால் அச்சிட்டுப் வெளியிடப்படுகிறது.